PHONE No. 3249 மலாய் 10-சதம் பர்மா 0-1-6 இலங்கை 7-சதம்

TAMIL MANI REGD. NO. M. 3384

தமிழ் மணி

எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்

[வாரப் பதிப்பு]

எல்லோரு மோர்நிறை எல்லோரு மோர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்—பாரதி

மணி 6
ஓசை 8

சென்னை—விக்கிரம-ஹு மார்கழிமீ 15உ ஞாயிற்றுக்கிழமை (29—12—40)

விலை ஒரு அணு

கேடு நினைப்பான்!



கெடுவான் கேடு நினைப்பான்; ஹிட்லருக்குக் கேடுகாலம் நெருங்கிவிட்டது; ஆகவே, அவருக்கு நாசகால புத்தி தோன்றியது. ஜெர்மனிக்குப் பரம விரோதியான ரஷியாவுடன் ஒப்பந்தஞ் செய்து கொண்டார். ஐரோப்பாவை ஜெயித்தபின், கடைசியில் ரஷியாமீது பாயலாமென்று நினைத்தார். ஆனால், ரஷியக் கரடி சும்மா இருக்குமா? அது உறுமுகிறது! அந்த உறுமலைக் கேட்டு ஹிட்லர் நடுங்குகிறார்! ரஷியக் கரடி பாய்ந்து விடுமோவென்று அஞ்சி ஓட்டமெடுக்கிறார்! வினை விதைத்தவன் வினை அறுப்பான்; ஹிட்லர் விதைத்த வினையை அவரே இன்று அனுபவிக்கிறார்.

சொக்கநாதன்

*

தொடர் கதை

ரஞ்சிதம் எங்கே?

தஞ்சை இளவரசி மோகனாவும், கமலமும் அவர்கள் அறையிலிருந்து வெளியில் போகக் கூடாதென்பது, ராணியின் எண்ணம்; அவர்கள் இருவரும் வெளியில் சென்றால், ராணி போட்டிருந்த திட்டம் பாழாய்ப் போய்விடுமென்று ரஞ்சிதம் பயந்தாள். ஆகவே, ராணியும் ரஞ்சிதமும் யோசனை போட்டு, மோகனாவின் அந்தப்புரத்தில் ஒரு சேவகனைக் காவலுக்கு நிறுத்தினர்; அவர்கள் நிம்மதியாகத் தூங்கினார்கள். அதிகாலையில் எழுந்து வெளியில் வந்தபின்தான், சேவகன் அவர்கள் அந்தப்புரத்தைக் காவல் காத்துக் கொண்டிருந்ததைக் க்ண்டனர். ராணிக்கும், ரஞ்சிதத்துக்கும் பொல்லாத கோபம்; ராணி, சேவகனைத் திட்டினாள்; சேவகன் அது தளகர்த்தரின் உத்திரவு என்றான்; தளகர்த்தர் என்ற பெயரைக் கேட்டதும், ராணி திடுக்கிட்டுப் போனாள்; சேவகனை அனுப்பி வைத்துவிட்டு அறையினுள் சென்றாள். ரஞ்சிதம் ஆந்தைபோல் விழித்துக் கொண்டு நின்றாள். தளகர்த்தர் உத்திரவு என்பதை அவள் நம்பவே இல்லை. கமலந்தான் ஏதோ சூழ்ச்சி செய்திருக்கக் கூடுமென்று சந்தேகித்தாள். ஆகவே, அவள் ராணியிடம் விடை பெற்றுக் கொண்டு, இரவு என்ன சூழ்ச்சி நடந்ததென்பதை அறிய, இளவரசியின் அந்தப் புரத்துக்குச் சென்றாள். அங்கு ஏதேனும் அரவங் கேட்கிறதோவென்று உற்றுக் கேட்டாள். ஒரு அரவமும் கேட்கவில்லை; பாட்டி, மோகனா, கமலம் முதலியோர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர்.

சேவகன் இல்லாத சமயத்தில், கமலமும், மோகனாவும் அந்தரங்க அறைக்குச் சென்றதோ, அவர்களை மாய சேவகன் அழைத்துக் கொண்டு வந்ததோ, ரஞ்சிதத்துக்குத் தெரியாது. மோகனாவும், கமலமும் வெளியில் போய்விட்டுவந்து, பாட்டியுடன் பேசிக்கொண்டிருந்ததையும், ரஞ்சிதம் அறியமாட்டாள். அவளுக்குக் கமலத்தின்மீது சந்தேகமிருந்தபோதிலும், உண்மையை அறிந்துகொள்ள அவளால் முடியவில்லை. ஏதேனும் உளவு கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் அவள் நந்தவனத்தைநோக்கிநடந்தாள். நந்தவன வாசலும்பூட்டப்பட்டிருந்தது. வாசலைத் திறந்துகொண்டு நந்தவனஞ் சென்றாள். ஆனால், வாசல்படியின் அருகிலேயே சில காலடிச் சுவடுகளைக் கண்டாள். அந்தச் சுவடுகளைப் பின்பற்றிச் சென்றாள். அந்தச் சுவடுகளோ சிறிது தூரம் சென்றதும் மறைந்துவிட்டன. மீண்டும் மற்றோர் இடத்தில் அதே அடிச் சுவடுகள் அவள் கண்களுக்குத் தென்பட்டன. அவற்றையும் பின்பற்றிச் சென்றாள். அந்தச் சுவடுகளும், புல்லின்மீது நடந்து சென்று மறைந்தன. ரஞ்சிதம் ஏமாந்து போனாள். அந்தச் சுவடுகள் யாருடையதென்பதை அவளால் அறிந்துகொள்ள முடியவில்லை. சோர்ந்துபோய், நந்தவனத்தின் அருகிலுள்ள ஒரு பெஞ்சின் மீது உட்கார்ந்தாள். அரண்மனைக்கு மாயமாக வந்துபோன தளகர்த்தன் மீதே அவள் எண்ணம் பதிந்து கிடந்தது. அந்தத் தளகர்த்தர் வந்தது மெய்யா? மெய்யானால், வந்தவர் உண்மையில் ஒரு தளகர்த்தர்தானா? இன்றேல், வந்தவர் யார்; சேவகனை ஏமாற்றிச் சென்றவர் யாராக இருக்கலாம் என்பதைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது யாரோ பின்னால் நடந்து வந்த சப்தம் கேட்டு, ரஞ்சிதம் திடுக்கிட்டு எழுந்தாள்; வந்தவனை உற்றுக் கவனித்தாள்.

"ஓகோ! நீங்களா? வாருங்கள்.... என் இவ்வளவு அதிகாலையில் வந்துவிட்டீர்கள்?..."

"யார்?...ரஞ்சிதமா? ரஞ்சிதம் உன்னைத் தேடிக்கொண்டுதான் வந்தேன்...நெடு நேரமாக இங்கு காத்திருக்கிறேன்..."

"ஏன் அவ்வளவு அவசரம்? நான் இங்கு வருவது உங்களுக்கு எப்படித் தெரியும்?..."

"நீ இங்கு வருவது எனக்குத் தெரியாது. அரண்மனை நந்தவன வாசல் வழியாக உன்னைத் தேடிக் கொண்டு வர நினைத்தேன். ஆனால், வாசல் பூட்டப்பட்டிருந்தது; அந்தக் கதவு திறக்கும் வரையில் நந்தவனத்திலேயே அங்குமிங்கும் சுற்றித் திரிந்துகொண்டிருந்தேன்..."

"எதற்காக அவ்வளவு அவசரமாக வந்தீர்கள்?"

"அதிகாலையில் நம்முடைய வேலைகளை முடித்துவிட்டால், ரொம்பச் சௌகரியமாக இருக்குமென்று எண்ணியே வந்தேன்..."

"அதற்காக இந்த வழியாக வருவானேன்?"

"இந்த வழியாக அதி சீக்கிரத்தில் அந்தப்புரத்துக்கு வந்துவிடலாம். மேலும், அரண்மனையின் பகிரங்க வாசல் வழியாக வந்தால், அது அநேகருக்குச் சந்தேகத்தை உண்டுபண்ணக்கூடும். பலருடைய அனுமதியையும் நான் கேட்கவேண்டியிருக்கும்...மேலும்..."

"ஆம்...மெய்தான்......பிற்காலத்தில் நம்மீது சந்தேகத்துக்கு வழி ஏற்படக்கூடாதென்று எண்ணி இந்த வழியாக வந்தீர்கள் போலும்!"

"ஆம்; ஆம் நன்றாகச் சொன்னாய்; நீ புத்திசாலி; உனக்குச் சொல்லியா கொடுக்கவேண்டும்?..."

"சரி, இன்னமும் கொஞ்சம் பொழுது போகட்டும்; நீங்கள் சற்று நேரம் இந்தத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருங்கள்..."

"நீ அரண்மனைக்குப் போகப் போகிறாயா?..."

"ஆம், நான் போய் மற்ற வசதிகளைக் கவனித்துக்கொண்டு திரும்பி வருகிறேன்..."

"நான் இங்கிருந்தால் அது சந்தேகத்துக்கு வழியாகுமல்லவா?..."

"ஆமாம்; அதுவும் யோசிக்க வேண்டிய ஒரு விஷயந்தான்..."

"ஆம், அதற்கு என்ன வழி செய்ய உத்தேசித்திருக்கிறாய்?..."

"உங்களை முதலில் அரண்மனைக்குள் அனுப்பி வைத்துவிட்டு, அப்புறம் நான் வருவதே நல்லதென்று நினைக்கிறேன்..."

"மெய்தான்; அதுதான் சரியான யோசனை!...நான் எங்கே இருப்பது?..."

"நீங்கள் நேரடியாகச் சென்று, என் அறையில் இருங்கள்...ராணி அறைக்குப் போக வேண்டாம்... நான் வந்தபின் மற்றக் காரியங்களை கவனித்துக் கொள்ளுவோம்..."

"நல்ல யோசனைதான்...நான் போகட்டுமா?..."

"வைத்தியரே கொஞ்சம் பொறுங்கள்...நீங்கள் எப்பொழுது நந்தவனத்துக்கு வந்தீர்கள்?..."

"நான் வந்து ரொம்ப நேரமாகிறது. நந்தவன வாசலுக்குச்சென்று வாசல் அருகிலேயே சில மணி நேரம் காத்துக்கொண்டிருந்தேன்."

ரஞ்சிதம், அவளுடன் பேசிக் கொண்டிருந்தவரை நன்றாகக் கவனித்தாள். அவள் மனதிலிருந்த சில சந்தேகங்கள் சிறிது மறைந்தன.

"நீங்கள் வந்து ரொம்ப நேரமாயிற்றா?...உங்களுடனே அல்லது உங்களுக்குமுன்னாலோ வேறு யாராவது இங்கு வந்திருந்தார்களா?..."

"நான் யாரையும் காணவில்லையே?..."

"நீங்கள் எங்கிருந்தீர்கள்?..."

"நந்தவனத்தின் வாசலுக்கு அருகில் ரொம்ப நேரம் உலாவிக்கொண்டிருந்தேன்......யாரும் வராததால் தடாகத்தை நோக்கி நடந்தேன். அப்புறம் குடிசைகளுக்கு அருகில் சென்று வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றேன்..."

"யாரும் வரவில்லையா?......உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமா?..."

"ஆம்; நிச்சயமாகத் தெரியும்... ஏன் இந்தக் கேள்விகளெல்லாம் கேட்குகிறாய்?..."

"ஒன்றுமில்லை......நமக்கு முன் யாரோ இங்கு வந்திருக்கிறார்கள்... ஒருவேளை கமலமோ, அல்லது இளவரசியோ வந்திருக்கக் கூடுமென்றுதான் கேட்டேன்..."

"யாரும் வரவில்லை...நிச்சயமாகச் சொல்லுகிறேன். நீ சந்தேகிக்கிறபடி, கமலமோ, அல்லது இளவரசியோ இங்கு வரவே இல்லை. வந்திருந்தால், நான் கட்டாயம் அவர்களைக் கண்டிருப்பேன்..."

"அப்படியா? ரொம்பச் சந்தோஷம்...நீங்கள் சந்தேகத்துக்கு இடம் கொடுக்கவேண்டாம்.......கமலமோ, இளவரசியோ இரவு வந்திருக்கக் கூடுமென்று சந்தேகித்தே நான் அவ்வாறு கேட்டேன்..."

"உனக்கு ஏன் அந்தச் சந்தேகம் ஏற்பட்டது?..."

"நம்முடைய வலையிலிருந்து தப்பித்துக்கொண்டுபோக அவர்கள் வந்திருக்கலாம்..."

"ஏன் அவர்கள் தப்பித்துக் கொண்டுபோகவேண்டும்? ... நம்மீது தான் அவர்களுக்குச் சந்தேகங் கிடையாதே?..."

"அப்படிச் சொல்லவேண்டாம்... பாட்டிக்கோ இளவரசிக்கோ அவ்வித சந்தேகம்ஏற்படாமலிருக்கலாம்; ஆனால், அந்த கமலம் இருக்கிறாளே அவள் பொல்லாதவள், விஷப் பாம்புக் குட்டி! அவளை அவ்வளவு சுலபமாக ஏமாற்றிவிட முடியாது...அவ

(15-ம் பக்கம் பார்க்க)

தங்கமெடல் பரிசு பெற்ற

லார்டஸ் ஆர்ட் எம்பிராயடரி ஒர்க்ஸ்.,

வெள்ளி சரிகை பூவேலைகள்.

நமது ஸ்தாபனத்தில் பட்டுத் துணிகளில் நேர்த்தியான மாதிரி வெள்ளி சரிகைகளில் பூ வேலைகள் செய்து கொடுக்கப்படும். கலியாண காலங்களுக்கும் மற்றும் விசேஷ வைபவங்களுக்கும் தேவையான பட்டுத் துணிகளில் சரிகை வேலை போட்டுக்கொள்ள வேண்டியவர்கள், நமது இடத்தில் இருக்கிற நூற்றுக்கணக்கான பூ வேலைகள் மாதிரியைப் பார்த்து, தங்களுக்கு பிரியமான மாதிரிகளில் ஆர்டர் கொடுக்கலாம். விசேஷமாக கத்தோலிக் கிறிஸ்துவர்கள் ஆலயத்திருப்பணிகளுக்கு தேவைப்படுகிற பூஜை ஆயத்தங்கள், காப்பாக்கள், ஆல்டர் துணிகள், திவ்யநற்கருணைப் பேழைத் துணிகள், ஆசீர்வாத வேயில்ஸ், ஸ்டோல்ஸ், சபைக் கொடிகள், திவ்ய நற்கருணைக் குடைகள், பாலீ, மையிற்றா முதலியவை தற்சமயம் கைவசம் இருக்கின்றன. அன்பர்கள் தங்கள் ஆர்டர்களை எமக்கு அனுப்பி ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

கைவசமிருக்கும் பூஜை ஆயத்தங்கள்:-

தங்க ஆயத்தம், சிவப்பு, பச்சை, வெள்ளை, ஊதா, கருப்பு முதலியன.

விலை ரூ. 10 முதல் 100 வரை.

(வெள்ளி சரிகைக்கு உத்திரவாதம்)

1-157, பிராட்வே, சென்னை. பிராஞ்சு:-கொழும்பு.



ம னோ ர த ம்

விஷம்போல் ஏறுகிறது!

ஆசை காட்டி மோசம்!

'சுத்தச் சூன்யம்'!

விலைக்கு வாங்கிய சனியன்!

கட்டி அழுவதா, கை விடுவதா?

போலந்து, நார்வே, டென்மார்க், பெல்ஜியம், பிரான்ஸ், முதலிய தேசங்களில் இன்று பஞ்சம் மக்களைப் பிடுங்கித் தின்னுகிறது. அந்தப் பஞ்சத்துக்குக் காரணம் ஹிட்லரே. ஆனல், அதே ஹிட்லர் அந் நாடுகளுக்காகப் பிச்சை கேட்கிறர்.

ஐரோப்பாவின் "வெறிநாய்!" என்று ஹிட்லரை அழைக்கின்றனர். ஆனல், அந்த "வெறி நாயி"ன் வேகம் இதுவரையில் பூர்ணமாகவில்லை; இனிமேல் தான் அவர் வெறியைப் பூர்ணமாகக் காணலாம். இது வரையில் நடந்து வந்த யுத்தத்தில், ஹிட்லரின் வெறி பரிபூர்ணமாகப் பிரதி பலிக்கவில்லை; அது பூர்ணமாகப் பிரதிபலிக்கப் போவது திண்ணம்; ஐரோப்பிய யுத்தம் தீவிரமாக நடைபெறுங்காலம் நெருங்கி வருகிறது. யுத்தம் எவ்வளவுக்குத் தீவிரமாகிறதோ, அவ்வளவுக்கு ஹிட்லரின் வெறி வேகமும் விஷம்போல் ஏறிக்கொண்டே போகும். இதாலியின் தோல்வியே ஹிட்லரின் வெறியைத் தூண்டி விடக் காரணமாக இருக்கலாம்.

ஃ ஃ ஃ

ஆசை வார்த்தை காட்டி மோசம் பண்ணுவதே ஹிட்லரின் ராஜ தந்திரம்! இந்த யுத்தத்தில் இறங்குமுன், அவர்முஸோலினிக்கு ஆசை வார்த்தை காட்டிவந்தார் யுத்தத்தில் ஜெயித்தால், முஸோலினிக்கு ஏராளமான பிரதேசங்களைக் கொடுப்பதாகவும், யுத்தக் கொள்ளையில் சம பங்கு கொடுப்பதாகவும் ஆசை காட்டினர். முஸோலினிக்கு மண்ணசை அதிகம்; அந்த ஆசையால், அவர் ஹிட்லரை ஆதரிக்க முன் வந்தார். பிரான்ஸ் சரணகதியடையும் சமயத்தில் அவர் ஹிட்லருக்கு உதவிக்குச் சென்றர் சரணகதியடையும் பிரான்ஸின் முதுகில் குத்தினர். ஏன்? ஹிட்லர் முஸோலினிக்கு அதிகப் பங்கு கொடுப்பார் என்ற எண்ணத்தில் அவர் அபார தீரத்தைக் காட்டினர்!



பால்கன் நாடுகளில் கண் வைத்திருந்த ஹிட்லர் ருமேனியாவை நாஜி மயமாக்கி விட்டார். இதர பால்கன் நாடுகளையும் நாஜி மயமாக்கக் கனவு காண்கிறர். அவர் கனவு பலிக்குமா?

ஆனல், அதிக ஆசை, அதிகத் தரித்திரம் என்பதை முஸோலினி மறந்து போனர்! அவருடைய ஆசை அவர் வாயிலேயே மண்ணைப் போட்டது!

ஃ ஃ ஃ

சரணகதியடைந்த பிரான்ஸில் சமபங்கு கொடுக்கும்படி, முஸோ



பிரிட்டனே விமானப் படைகளால் தாக்கி அபார சேதத்தை உண்டுபண்ணிக் கொண்டிருந்த வரையில் ஹிட்லர் முகம் சிவந்திருந்தது பிரிட்டன் எதிர்த்துத் தாக்குவதைக் கண்டதும் ஹிட்லர் முகம் கருத்துப்போயிற்று!

லினி கேட்டார். பிரான்ஸில் ஒரு பகுதியும், வட ஆப்பிரிக்காவிலுள்ள பிரஞ்சுக் காலனிகளில் முக்கியமான பகுதியாகிய டூனிஸ் பிரதேசத்தையும் இதாலிக்குக் கொடுத்து விடும்படி, முஸோலினி ஹிட்லரை வற்புறுத்தினர். ஆனல், மண்ணசையில் ஹிட்லர், முஸோலினிக்கு இளைத்தவரல்ல; ஹிட்லர் கையில் சிக்கிய தேசங்களை அவர் யாருக்கும் பங்கு போட்டுக் கொடுக்க விரும்பவில்லை. விடாக கண்டன், கொடா முண்டன் கதையில் ஹிட்லர் முஸோலினி தகராறு வளர்ந்தது. என்றாலும், ஹிட்லர் முஸோலினிக்கு விட்டுக் கொடுக்கவில்லை. வெற்றியடைந்த ஹிட்லருக்கு முஸோலினி உதவி அவ்வளவாகத் தேவையில்லை. முஸோலினியை அவர் இந்த யுத்தத்தில் சம்பந்தப்படுத்தியது ஒரே ஒரு காரணத்துக்காகத் தான். மத்தியதரக்கடலில், பிரிட்டனை மடக்குவதற்கு, அல்லது, பிரிட்டிஷாருக்குத் தொந்திரவு கொடுப்பதற்கு முஸோலினியை உபயோகிக்க ஹிட்லர் எண்ணினர். அதற்காகவே முஸோலினியைத் தூண்டினர். ஆனல், முஸோலினி கேட்ட பங்குகொடுக்க ஹிட்லர் தயாராக இல்லை; இதை அறிந்த முஸோலினி, ஹிட்லரையும் மீறி, கிரீஸ் மீது பாய்ந்தார். கிரீஸில் நன்ருக உதை வாங்கினர்; இன்னமும் உதை வாங்கிக் கொண்டுதானிருக்கிறர். கிரீஸ் படையெடுப்பை நிறுத்தவும் முடியாமல், தொடர்ந்து நடத்தவும் முடியாமல் இன்று திண்டாடுகிறர்! ஹிட்லர் அவருக்கு உதவிக்கு வருவாரென்ற நம்பிக்கைக் கூட முஸோலினிக்கு இல்லை. ஹிட்லர் முஸோலினிக்கு உதவிக்குப் போவதாக இருந்தால்கூட, ஹிட்லரால் அது முடியாது. ஏனெனில், நிலைமை அவ்வளவு சிக்கலாக இருக்கிறது. இந்தச் சிக்கலை உண்டுபண்ணியது முஸோலினிதான். முஸோலினியை எதற்காக ஹிட்லர் உபயோகிக்க நினைத்தாரோ, அந்த உபயோகத்துக்குக்கூட முஸோலினி பயன்பட



உலகமும், உலகிலுள்ள சமுத்திரங்களும் தனக்கு அடக்கமென ஹிட்லர் நினைக்கிறர். வடகடலையும், பிரிட்டிஷ் கால்வாயையும் அடக்கி ஆட்சி செலுத்தப் பார்க்கிறர். ஆனல், சமுத்திரங்கள் யாருக்குத்தான் அடக்கம்? சமுத்திர அலைகள் ஹிட்லரைக் கண்டு பயந்து விடுமா? அலைகள் ஓங்கி அடிக்கின்றன. ஹிட்லர் ஓலமிடுகிறர்!

வில்லை; . ஆகவே, முஸோலினியை ஹிட்லர் ஒதுக்கித் தள்ள நினைக்கிறர்.

ஃ ஃ ஃ

முஸோலினிக்குக் கிரீஸில் கிடைத்த தோல்வியும், வட ஆப்ரிக்காவில் கிடைத்த பெரிய தோல்வியும் ஹிட்லரைப் பெரிய திண்டாட்டத்தில் கொண்டுவந்து விட்டது. மத்தியதரக் கடலில் ஹிட்லர் போட்டிருந்த திட்டமெல்லாம் தவிடு பொடியாகிவிட்டன. எகிப்துக்கு ஜெர்மன் ராணுவங்களையும், விமானங்களையும் அனுப்ப ஹிட்லர் நினைத்தார். அதற்காக ஸ்பெய்ன் உதவியை எதிர்பார்த்தார்; ஸ்பெய்ன் கை விரித்துவிட்டது. ஸ்பெய்னில் பொருளாதர நிலைமை ரொம்பவும் மோசம். அந்த நிலைமையை ஹிட்லர் சாதகமாக்கிக் கொள்ள நினைத்தார். ஆனல், பிரிட்டன், ஸ்பெய்னுடன் ஒரு வர்த்தக ஒப்பந்தஞ்செய்து கொண்டு, ஸ்பெய்னின் பொருளாதார நிலைமையைச் சீர்படுத்தியது. அதனல், ஹிட்லரை ஆதரிக்க ஸ்பெய்ன் மறுத்துவிட்டது. ஸ்பெய்ன் ஹிட்லருக்கு இணங்கி இருந்தால், மத்தியதரக் கடலில் ஹிட்லரே, பிரிட்டிஷ் கடற்படைகளை எதிர்த்துமுறியடிக்க முன் வந்திருப்பார் ஸ்பெய்ன் வழியாக ஜெர்மன் ராணுவங்களை எகிப்துக்கு அனுப்பி, அங்கு யுத்தத்தைத் தீவிரமாக நடத்தி இருப்பார். இப்பொழுதோ, அதற்கும் வழி

(அடுத்த பக்கம் பார்க்க)



அச்சு நாடுகள் அரணுக்குள் பதுங்கியிருக்கின்றன அத்துடன் ரஷியாவையும் சேர்த்துக்கொள்ள ஹிட்லர் நினைக்கிறர். ஆனல், ஸ்டாலின் ஹிட்லர் வலையில் சிக்கிக் கொள்ளுவாரா? ஒருபோதும் சிக்கமாட்டார் என்பது நிச்சயம்.

இல்லை. ஸ்பெய்ன் கை விரித்தது, ஹிட்லருக்கு ஒரு பெரிய தோல்வி; ஜிப்ரால்டரை சுக்கலாக்கிவிட அவர் போட்டிருந்த திட்டம் சுத்தச் சூன்யமாகி விட்டது! உடனே அவர் பால்கன் நாடுகள்மீது கவனஞ் செலுத்தினார் இதாலி தோல்வி, அவர் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டது. பால்கன் வழியாகவும், கருங்கடல் வழியாகவும் இதாலிக்கு உதவிக்குப் போக ஹிட்லர் நினைத்தார். ஆனால், பால்கன் நாடுகள் அதற்கு இடம் கொடுக்கவில்லை; பால்கன் நாடுகளில் ஹிட்லருக்குச் சனியன் போல் குறுக்கே நின்றது ரஷியாதான்! பால்கன் நாடுகளுக்கு ரஷியாவின் ஆதரவு உண்டு. துருக்கிக்குக்கூட ரஷியா மறைமுகமாக ஆதரவு அளித்து வருகிறது. பால்கன் நாடுகளுக்கு விரோதமாக, ஹிட்லர் துணிந்து யுத்தத்தில் இறங்குவாரேயாயின், அவருக்கு பால்கன் எங்கும் எதிர்ப்பு ஏற்படுவது நிச்சயம். இதை அறிந்தே ஹிட்லர் பால்கன் நாடுகளில் வாலாட்டத் துணியவில்லை. மேலும், பால்கன் நாடுகளை மீறி, அவர் கருங்கடலுக்கு ராணுவங்களை அனுப்பினால், ரஷியாவுடன் நிச்சயமாக மோதிக்கொள்ள வேண்டிவரும். இந்த ஆபத்தான நிலைமையில் ரஷியாவுடன் மோதிக்கொள்ள ஹிட்லர் விரும்பவில்லை. அது சனியனை விலைக்கு வாங்கியது போல் வந்து முடிந்திருக்கும்!

ஃ ஃ ஃ

ரஷியாவே ஹிட்லரின் கடைசி நோக்கம். ஐரோப்பாவை முறியடித்தபின், ரஷியாவை ஒழிக்க அவர் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார். ரஷியா யுக்ரெய்ன் பிரதேசத்தின்மீது ஹிட்லருக்கு நெடுங்காலமாகவே கண்ணோட்டம் இருந்து வருகிறது. இதை ரஷிய சர்வாதிகாரி ஸ்டாலின் அறிவார்; அறிந்திருந்தபோதிலும், அவர் ஹிட்லருக்குச் சாதகமாகவே இருக்கிறார். ஆனால், ஹிட்லர் இந்த யுத்தத்தில் ஜெயிக்க வேண்டுமென்ற எண்ணம் ஸ்டாலினுக்குக் கிடையவே கிடையாது உறவாடிக் கெடுக்கவே ஸ்டாலின் உத்தேசித்திருக்கிறார். உறவாடிக் கழுத்தறுக்க வேண்டுமென்றுதான் ஸ்டாலின் எண்ணம். ஹிட்லர் இந்த யுத்தத்தில் தோல்விபடைய வேண்டும்; ஜெர்மனி சின்னபின்னமாகிச் சீரழிய வேண்டும். அதற்கு வழியென்ன? யுத்தத்தைத் தீவிரப்படுத்துவதுதான் அதற்கு வழி. ஸ்டாலின், ஹிட்லரைத் தூண்டிவிடுவதின் ரகசியம் இதுதான். யுத்தம் தீவிரமாக நடந்தால், பிரிட்டன் பலவீனமாகும்; பிரிட்டன், யுத்தத்தில் ஜெயித்தே தீருமென்பது ஸ்டாலினுக்குத் தெரியும். ஆனால், பிரிட்டன் பலத்துடன் திரும்பக்கூடாது; அது பலமிழந்து, பற்களை இழந்து திரும்ப வேண்டும்; இதுவே ரஷியாவின் அந்தரங்க நோக்கம். சகல ஐரோப்பிய வல்லரசுகளின் பற்களைப் பிடுங்க வேண்டுமென்பதே ரஷியாவின் நினைப்பு. ரஷியா நிம்மதியாக இருக்க அதுவே வழி. இன்றேல், ரஷியா நிம்மதியாக இருக்க முடியாது; சகல ஐரோப்பிய வல்லரசுகளும் ரஷியாவுக்கு விரோதமாகத்

ம னோ ர த ம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

திரும்பிவிடும். இதைத் தடுக்கவே ஸ்டாலின் இந்த தந்திரஞ் செய்து வருகிறார்.

ஃ ஃ ஃ

ஸ்டாலின் தந்திரம் பலிக்காமல், ஹிட்லர் இந்த யுத்தத்தில் வெற்றி பெறுவாரேயாயின் ஸ்டாலின், ஹிட்லரை எதிர்த்தே தீருவார். ஹிட்லர் வெற்றிக்கான அறிகுறிகளைக் காணோம். ஆகவே, ஸ்டாலின் கை கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்! ஆனால் இதாலிக்கு உதவிச் செய்ய, ஹிட்லர் பால்கன் நாடுகள் வழியாகச் செல்லுவாரேயாயின் ஸ்டாலின் விழித்துக் கொள்ளுவது திண்ணம். ஹிட்லரை எதிர்க்கத் துணிந்து விடுவார்; எதிர்த்தே தீருவார்; எதிர்க்கத் தயாராகவும் இருக்கிறார். அதற்கான ஏற்பாடுகளும் செய்து வருகிறார். பால்கன் நாடுகளுக்கும் ஊக்கமூட்டி வருகிறார்.

ஃ ஃ ஃ

பல்கேரியா, யுகோஸ்லாவியா, போன்ற பால்கன் நாடுகள்கூட ஹிட்லரை எதிர்க்கத் தயாராக இருக்கின்றன. அந்த நாடுகளை மீறி, கிரீஸுக்கு ராணுவங்களை அனுப்ப ஹிட்லருக்குத் தைரியமில்லை. ராணுவங்களை அனுப்பினால், ஹிட்லருக்குத் தோல்வி அதிசீக்கிரத்தில் வந்துவிடும். இதை அறிந்தே ஹிட்லர் பிரான்சை நயவஞ்சகமாக வசப்படுத்தப் பார்க்கிறார். உருட்டல், மிரட்டலால் பிரான்சின் உதவியைப் பெற நினைக்கிறார். முஸோலினியிடமிருந்து எந்தவிதமான உதவியும் கிடையாது என்பது ஹிட்லருக்குத் தெரிந்து விட்டது. அவரைக் கட்டியழுவதிலும், கைவிட்டு விடுவதுதான் மேல் என்பதையும் ஹிட்லர் அறிந்து கொண்டார். ஆகவே, பிரஞ்சு ராணுவங்களையும், கடற்படைகளையும் கைப்பற்றிக்கொள்ள ஜாலவித்தைகள் செய்கிறார்! முஸோலினியின் தோல்வி, ஹிட்லர் குறுக்கை முறித்து விட்டது. முறிந்த குறுக்குக்குச் சப்பை கட்ட பிரான்சின் உதவியை நாடுகிறார். பிரஞ்சுப் படைகளைக் கொண்டு, பிரிட்டனை எதிர்த்து, இழந்த வெற்றியை மீண்டும் பெற நினைக்கிறார். ஆனால், அவர் எண்ணம் ஈடேறுமா? ஈடேறாது. பெடெய்ன் அதற்கு மறுத்து வருகிறார். இது சம்பந்தமாக ஹிட்லருக்கும், பெடெய்னுக்கும் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. அவர்கள் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்பது மர்மமாகவே இருக்கிறது. இது சம்பந்தமான உண்மைகள் வெளிவரவில்லை. ஆனால் ஒருவிஷயம் தெளிவாகிறது. ஹிட்லருக்குப் பிரஞ்சு ராணுவங்களையும், கடற்படைகளையும், பிரஞ்சுத் துறைமுகங்களையும் கொடுத்துதவ, பெடெய்ன் மறுத்துவிட்டார் என்பதுதான். இதுவரையில் பெடெய்ன் உறுதியாகவே இருந்து வருகிறார்; இனிமேலும் பெடெய்ன் உறுதியாக இருப்பாரேயாயின் ஹிட்லர் நிலைமை மோசமாவது திண்ணம். ஹிட்லர் இனிமேல் என்ன செய்யக் கூடும்? அவர் பெடெய்ன் சர்க்காரைக் கவிழ்க்க நினைக்கலாம். பிரான்ஸ் முழுவதையும் கைப்பற்றத் துணியலாம்; ஆனால் ஹிட்லருக்கு அதனால் லாபமில்லை நிலைமை இன்னமும் ஆபாசமாகிவிடும். ஒருவேளை பிரான்ஸ் முழுவதும் ஹிட்லருக்கு விரோதமாகத் திரும்பினாலும் திரும்பக்கூடும். பிரான்ஸ், ஹிட்லரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யத்

(13-ம் பக்கம் பார்க்க)

ஆனந்த பொக்கிஷம்

அல்லது,

நிச்சயமான ஆண் குழந்தை

ஆசிரியர்:—

R. புருஷோத்தமன்.

ஆனந்தமான குடும்ப வாழ்க்கை, நிச்சயமான ஆண் குழந்தை, நீண்ட ஆயுள் பெறும் வகை, திடகாத்திர சுக வாழ்க்கை முதலியவை வெகு தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

பெண்களுக்குச் சிறந்த பரிசு புது விவாகமான தம்பதிகளுக்கு மிக மிக அவசியம்.

விலை அணா. 4.

எல்லாத் "தமிழ் மணி" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

0-4-9 ஸ்டாம்புகள் அனுப்புவோருக்குத் தபால் செலவின்றி அனுப்பப்படும்.

மானேஜர்:—

"தமிழ் மணி"

மதராஸ்.

இருமல் இளைப்பு தீர்ந்து விட்டது!

பழனி **R. M. K. தாளக பஸ்பம்**

இருமலுக்கு கை கண்ட மருந்து.

எவ்வளவு நாள்பட்ட காசம், க்ஷயம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, பீனிசம் இருந்தாலும் சரி, இதில் அவசியம் தீரும்.

பித்த நீர் சிரசுக்கேறி கபாலம் கோதித்தே 8-வித பீனிச ரோகம் வருகிறது.

பீனிச ரோகம் முத்தியே காசம் 8-ம், இருமல் 16-ம், இளைப்பும் வருகிறது.

நீங்கள் இருமலினால் என்ன கஷ்டப்பட்டாலும் சரி, எத்தனையோ மருந்துகள் சாப்பிட்டு இருமல் தீராதிருந்தாலும் சரி, உங்கள் இருமலை 6-நாளில் கண்டிப்பாய் நிறுத்திவிடும். அது எத்தனை வருஷத்திய ரோகமானாலும் சரி, பறந்துவிடும். சீதள, மழை, பனி, காலங்களில் வரும் ஈளை, இருமல், இரைப்பு, இளைப்பு, கக்கல், மந்தார காசம் ரத்த காசம், கஷ்ட சுவாசம் கோழை. கபக்கட்டு, அதனால் மார்புவலி, விலாவலி, முள்ளத்தண்டு வலி, சிராய்ப் பீனிசம். மூக்கில் ஜலம் ஒழுகுதல், தும்மல், வயிறு உப்பசம், தலைவலி, காது குடைதல், ஜுரம், மூச்சுத்திணறுதல், நெஞ்சில். தொண்டையில் கர்முர் என்ற சப்தம், பூனை போல் கத்துதல், கூவுதல், நுரையீரல் தாபனம்முதலியவை இதில் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்ட மகா அருமையான மருந்து. (25 நாள் தாளக பற்பம், அனுபானம் தாளிச்சபத்திரி சூர்ணத்துடன் விலை ரூ 10.)

தபால் சார்ஜ் அணா 0—10—0. 25 நாளைக்கு குறைத்து மருந்துகள் அனுப்பபட மாட்டாது.

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை, சித்த வைத்தியசாலை பழனி.

தந்தி விலாசம்:- "வேலுசாமி பழனி"



சங்கநாதம்

காக்காய் பிடிப்பது யார்!

கொக்கு தலையில் - - வெண்ணெய்!

மாமி உடைத்த மண்குடம்!

வெறும் கண் துடைப்பே!

-: வந்த திருக்கூட்டம்! :-

⁘ நல்ல வேட்டைதான்! ⁘

(பூம்-பூம்)

அன்பே அவதாரமான ஏசு கிறிஸ்து பிறந்த வாரம்; இது சமாதானத்துக்கு ஏற்ற வாரம். இவ் வாரத்தில், பிரிட்டிஷ் மன்னர் முதல், போப்பாண்டவர் வரையில், உலக சமாதானத்தை வற்புறுத்திச் செய்தி அனுப்பினார்கள். ஆனால், சமாதானம் ஏற்பட்டதா? இல்லை; சமாதானத்துக்கான அறிகுறிகளாவது தோன்றியிருக்கின்றனவா? கிடையாது. கிறிஸ்து எகிப்தில்பிறந்தபோதிலும், கிறிஸ்து மதத்துக்குப் பிறப்பிடம் ஐரோப்பா தான். ரோமாபுரியே அதன் தலைநகரம். என்றாலும், இன்று கிறிஸ்துவின் அரிய உபதேசத்துக்கு மாறாக, மிருகத்தனமான யுத்தத்தில் ஈடுபட்டிருப்பது ஐரோப்பாவே! கிறிஸ்து பிறந்த தினத்தில்கூட அங்கு யுத்தத்தை நிறுத்தவில்லை; யுத்தத்தை நிறுத்திவைத்ததாகச் செய்தி வந்தது தவறு. கிறிஸ்மஸ் தினத்தன்று அங்கு கால நிலை சரியாக இல்லை; பனி அதிகம்; அதை உத்தேசித்தே சண்டை செய்யவில்லை. ஹிட்லர் விமானங்களை அனுப்ப முடியாதுபோயிற்று. இன்றேல், அங்கு ஒருவருக்கொருவர் கழுத்தை அறுத்துக் கொண்டிருப்பார்களென்பதில் சந்தேகமில்லை. கிறிஸ்துவர் என்று சொல்லிக்கொள்ளும் மேனாட்டினர் கிறிஸ்துவின் உயர்ந்தபோதனைகளை மறந்து, காட்டு மிராண்டிகளாக நடந்துகொள்ளுவது கிறிஸ்து மதத்துக்கே பெரிய அவமானமாகும்! மேனாட்டினர் இந்த உண்மையைச் சிந்தித்துப் பார்த்தார்களா? சிந்தித்துப் பார்க்கக்கூட அவர்களுக்கு அவகாசம் கிடைத்திருக்குமோ என்னமோ சந்தேகந்தான்.

* * *

சதா காலமும் பிற நாடுகளை வஞ்சிப்பதிலும், சுரண்டுவதிலும், சிந்தனை செலுத்திவரும் மேனாட்டினருக்கு, தத்துவம் ஏது, தர்மம் ஏது? பிற நாடுகளைக் கொள்ளையடிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தால் போதும்! அதுதான் அவர்கள் தத்துவம்; வாழ்க்கையின் நோக்கம் அப்பேர்ப்பட்டவர்களுக்கு கிறிஸ்துவின் ஒப்பற்ற போதனைகள் எப்படி மண்டையில் ஏறும்? அபிசீனியாபோன்ற நாடுகளை ஜெயித்த முஸோலினி என்ன சொன்னார் தெரியுமா? அபிசீனியாவுக்குக் கிறிஸ்து மதத்தின் உயர்ந்த தத்துவங்களைப் போதிக்கவே, அபிசீனியரை கொன்று, குவித்து, அபிசீனியாவை அடிமைப்படுத்துவதாகச் சொன்னார்! கிறிஸ்துவின் போதனைகளை இவ்வாறு நாசமாக்கி வருகின்றனர். முத்துக்களை பன்றிகளுக்குமுன் எறிய வேண்டாம், என்று கிறிஸ்து பிரான் சொன்னது, ரொம்பப் பொருத்தமாக இருக்கிறது.

* * *

இந்தச் சந்தர்ப்பத்தில் காந்திஜி மேனாட்டினருக்கு மறைமுகமாக நல்ல உபதேசஞ்செய்திருக்கிறார். அது அவர்களுக்குச் சரியான இடி! போப்பாண்டவர்கூட அதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். காந்திஜி ஆரம்பித்திருப்பது சாத்வீகப் போர்; அந்தப் போராட்டத்தைகூடக் கிறிஸ்மஸ் வாரத்தை உத்தேசித்து நிறுத்தி வைத்திருக்கிறார். போப்பாண்டவர் பாராட்டியிருக்கும் காந்திஜியின் கொள்கையை, ஒரு இழவும் அறியாத சு. ம. காரர் நிந்திக்கிறார்கள்! மண்டுகளுக்கு என்ன தெரியும்? அவர்கள் பர மண்டையில் நியாயம் எப்படி ஏறும்? கிறிஸ்துவர்களை வசப்படுத்தவும், மேனாட்டினரை விசேஷமாக அமெரிக்ரை ஏமாற்றவும் காந்திஜி இந்த தந்திரத்தைக் கைக் கொண்டிருப்பதாகச் சு. ம. நாயக்கர் சொல்லுகிறார்! அது மட்டுமல்ல; கிறிஸ்துவர் உலகத்தைக் "காக்காய்" பிடிக்கக் காந்திஜி இந்தச் சூழ்ச்சி செய்திருப்பதாகக் கூறுகிறார்! கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கும் சாமர்த்தியத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? சு ம நாயக்கர் சொல்லும் சாமர்த்தியம் அப்படித்தான் இருக்கிறது! கிறிஸ்துவர் உலகத்தைக் "காக்காய்" பிடிக்கவோ, அல்லது, ஏமாற்றவோ காந்திஜிக்கு என்ன அவசரம் வந்தது? ஒன்றுமில்லை. சு. ம. நாயக்கர் தான் பிரிட்டிஷாரைக் "காக்காய்" பிடிக்க முயற்சிக்கிறார்; பிரிட்டிஷாரை வாழ்த்துகிறார்; வானமளாவ உயர்த்துகிறார்! கிறிஸ்மஸ் தினத்தில் கூட யுத்தத்தை நிறுத்தப் பிரிட்டிஷாருக்கு அவகாசமில்லையென்று துதி பாடுகிறார்! ஆனால், கிறிஸ்மஸ் தினத்தன்று, இயற்கையாகவே யுத்தம் நின்றதா, இல்லையா? அன்று நாஜியர் பிரிட்டனை விழுங்கி விட்டார்களா? இல்லையே. ஹிட்லர் கூடக் கிறிஸ்மஸ் விழாவை நாஜி ராணுவங்களுடன் கழித்ததாகச் செய்தி வந்திருக்கிறது. இந்த நிலைமையில் காந்திஜியை சு. ம. நாயக்கர் பழிப்பது ஏன்? துவேஷந்தான் அதற்குக் காரணம். இதிலிருந்து சு. ம. நாயக்கரின் கோணல் புத்தியையும், அற்பத்தனமான போக்கையும் நன்கு தெரிந்துகொள்ளலாம்!

* * *

மன்னர்களும், மடாதிபதிகளும் மட்டும் கிறிஸ்மஸ் சமாதானச் செய்திகளை அனுப்பவில்லை. பார்லிமெண்ட் அங்கத்தினர்கள்கூட இந்தியாவுக்குச் சமாதானச் செய்தி அனுப்பியிருக்கிறார்கள். சென்ற ஆகஸ்ட் மாதம் 8-ந் தேதியன்று வைசிராய் வெளியிட்ட அறிக்கையை இந்தியர் ஏன் மீண்டும் புனராலோசனை செய்யக்கூடாதென்று கேட்டு, முக்கியமான 9 பார்லிமெண்டு அங்கத்தினர் கையெழுத்திட்டு, ஓர் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். பிரிட்டனும் இந்தியாவும் சமரசமாகப் போக வேண்டுமென்பது அந்தப் பார்லிமெண்டு அங்கத்தினர்கள் கருத்து அவர்களுக்கு நான் ஒரு யோசனை சொல்லுகிறேன்; வைசிராய் அறிக்கையை மீண்டும் இந்தியர் ஏன் புனராலோசனை செய்யக்கூடாதென்று கேட்கும் பார்லிமெண்டு அங்கத்தினர், அதே கேள்வியைப் பிரிட்டிஷ் சர்க்காரிடம் கேட்கட்டும்; அவர்கள் என்ன பதில் சொல்லுகிறார்களென்று பார்ப்போம். மாமி உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடமா?

* * *

வைசிராய் அறிக்கையை இந்தியர் ஏற்கனவே நிராகரித்து விட்டனர்; இந்தியர் கோரிக்கையையும் தெளிவுபடுத்திவிட்டனர். ஆனால், சமாதானத்துக்கு இன்று முட்டுக் கட்டை போட்டுக்கொண்டிருப்பது யார்? இந்தியரா, பிரிட்டிஷாரா? இந்தியரை கேள்விகேட்கும் பார்லிமெண்ட் அங்கத்தினர், பிரிட்டிஷ் மந்திரிகளை, விசேஷமாக இந்திய மந்திரி அமெரியை அதே கேள்வி கேட்டுத் தெரிந்துகொள்ளட்டும். இந்தியாவுக்குப் பூர்ண சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்பதே, பிரிட்டிஷாரின் எண்ணமாம்! இந்திய அரசியலை, இந்தியரே நிர்ணயித்துக் கொள்ள வேண்டுமென்பதுதான் அவர்கள் நினைப்பாம்! அப்படியானால், அதை பிரிட்டிஷார் ஏன் தெளிவாகச் சொல்லிவிடக்கூடாது? சொன்னால், வாய் முத்துச் சிதறிவிடுமா? ஒன்பது பார்லிமெண்ட் அங்கத்தினர்களும் சேர்ந்து சொல்லும் விஷயங்களை இந்திய மந்திரியோ, வைசிராயோ சொல்லிவிட்டால், நொடிப்பொழுதில் இந்திய அரசியல் நெருக்கடி தீர்ந்துவிடும். ஆனால், பிரிட்டிஷ் மந்திரிகள் அதற்குத் தயாராக இல்லை அவர்கள் குழந்தையைக் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடும் தந்திரத்திலேயே உறுதிகொண்டிருக்கிறார்கள். மைனாரிட்டிகளைச் சாக்காக வைத்துக்கொண்டு, இந்தியாவை ஆட்டிவைக்க எண்ணியிருக்கிறார்கள். அதே மைனாரிட்டிப் பைத்தியம், இந்தியருக்குக் கடிதம் எழுதிய பார்லிமெண்ட் அங்கத்தினர்களைக்கூட விட்டபாடில்லை! அப்படியானால், இந்த மைனாரிட்டிப் பிரச்னையை பிரிட்டிஷார் எவ்வளவு அக்கரையுடன் பாராட்டிச்சீராட்டி வளர்த்து வருகிறார்களென்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

* * *

சுதந்திரத்துக்காக அரும் பெரும் பாடுபட்டு வரும் இந்தியா சுதந்திரம் கேட்டால், பிரிட்டிஷார் அவர்கள் சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டை போட மைனாரிட்டிப் பிரச்னையைக் கிளப்புகிறார்கள்! இது, "ஜெக்கோ விஷயத்தில் ஹிட்லர் மைனாரிட்டி பிரச்னையைக் கிளப்பியதுபோல் இருக்கிறது" என்று கூறிய வெர்னன் பார்ட்லெட், மேலேகூறிய 9 பார்லிமெண்ட் அங்கத்தினர்களில் ஒருவர். இவரும் அந்த வேண்டுகோளில் கையொப்பமிட்டிருக்கிறார். இது ஆச்சரியமல்லவா? சமயத்துக்கும், சந்தர்ப்பத்துக்கும் தகுந்தவாறு ஓணான் போல், பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள்குணமும் மாறும்போலும்! ஆனால், மற்றொரு பார்லிமெண்ட் அங்கத்தினரான, ஸோரன்ஸன், இந்த 9 பார்லிமெண்ட் அங்கத்தினர்களின் அறிக்கையைக் கண்டித்திருக்கிறார். அவர் கைச் சாத்திடவும் மறுத்துவிட்டார். அதற்கு அவர் கூறியிருக்கும் காரணங்கள் பார்லிமெண்ட் அங்கத்தினர் கண்ணைத் திறக்குமென்று நம்புகிறேன். பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளுக்கு அது சரியான சவுக்கடியாகும்.

* * *

சுதந்திரத்துக்காகப் போராடிவரும் இந்தியரின் அபிலாஷைகளை ஏற்க மறுத்துப், பிரிட்டிஷ் மந்திரிகள் ஏமாற்றத்தை உண்டுபண்ணி வருகின்றனர்; இது பிரிட்டிஷ் சர்க்காரின் குறுகிய நோக்கத்தையும், அறிவின்மையையுமே காட்டுகிறது! அதைப்பற்றி பார்லிமெண்டு அங்கத்தினர்களும் வேண்டுமென்றே அவர்கள் கடிதத்தில் குறிப்பிடவில்லையென்று ஸோரன்ஸன் சொல்லுகிறார். அப்படியானால், இந்தியா

(அடுத்த பக்கம் பார்க்க)

சங்கநாதம்

முன் பக்கத் தொடர்ச்சி

வுக்குக் கடிதமெழுதிய பார்லிமெண்ட் அங்கத்தினர்களின் நல்லெண்ணத்தை எளிதில் அறிந்துகொள்ளலாம்! அது வெறும் கண்துடைப்புக் கடிதம் என்பதே இந்தியரின் அபிப்ராயம்; அப்படியே ராஷ்ட்ரபதி மௌலானா அபுல்கலாம் அஸாத்தும் சொல்லுகிறார். அந்தக் கடிதத்தில் விசேஷமாக ஒன்றுமில்லை; எல்லாம் பழைய பல்லவிதான்! அவர் சொல்லுவது முற்றிலும் சரி; இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்கவேண்டும்; இந்தியர் கைக்கு அதிகாரத்தை மாற்றவேண்டும் என்ற எண்ணம் பிரிட்டிஷாருக்கு அணுவளவுகூடக் கிடையாது என்பது வெள்ளிடைமலை! இந்த நிலைமையில் மீண்டும், மீண்டும் சமரசம் பேசி, பிரிட்டன் மீது நம்பிக்கை வைப்பது வீண்; அது விழலுக்கிரைத்த நீர்தான்!

* * *

காங்கிரசுக்கும், பிரிட்டிஷாருக்கும் சமரசத்தை உண்டு பண்ண முயற்சித்து வரும் சர். ஜெகதீஷ் பிரசாத், சாப்ரு கம்பெனியார் இதை கவனிக்க வேண்டும். அவர்கள் முயற்சி வெற்றி பெறுமா, அல்லது, தோல்வியடையுமாவென்பதை இதிலிருந்தே தெரிந்துகொள்ளலாம். காங்கிரஸ் சமரசத்துக்கு வரவேண்டுமென அறிக்கை வெளியிடும் சமாதானத் தூதுவர், முதலில், சர்க்கார் சமரசத்துக்குத் தயாராக இருக்கிறார்களா என்பதை அறிந்துகொள்ளுவது நலம். சர்க்கார் சமரச மனப்பான்மையை முதலில் அறிந்துகொண்டு, அதன் பின் சமரசத்துக்காக வேலைசெய்யலாம்; காங்கிரஸை நிந்திப்பதையே தொழிலாகக்கொண்டிருக்கும் மகாப்பிரகஸ்பதிகள் இந்த உண்மையை அறிந்தால், நிலைமை நன்கு தெளிவுபட்டு விடுமென்று மௌலானா அபுல்கலாம் அஸாத், சமாதான தூதுவர்களுக்கு யோசனை கூறியிருக்கிறார்.

* * *

மௌலானா அபுல்கலாம் அஸாத் புதுடில்லி வழியாக லாகூருக்குப்-புறப்பட்டுப் போயிருக்கிறார். போகிற வழியில் இந்த உண்மைகளை வெளியிட்டார். காங்கிரசுக்கும், சர்க்காருக்குமிடையே சமாதானம் இருக்கவேண்டும்; அல்லது, போராட்டம் இருக்க வேண்டும். இரண்டுங் கெட்டான் வழி எதுவும் இருக்கமுடியாது. இன்று காங்கிரசைப் போராட்டத்துக்கு இழுத்தது காந்திஜியல்ல; சர்க்கார்தான். புனா தீர்மானத்தின்மூலம் காங்கிரஸ் சமரசத்துக்கு வழி தேடியது. அந்தச் சமரச கொள்கையை உதறித்தள்ளி, காங்கிரசை சண்டைக்கு இழுத்தது சர்க்கார்தான். காங்கிரஸ் இன்று ஒரு போராட்டத்தில் இறங்கி இருக்கிறது; கடைசிவரையில் அது போராடியே தீரும். காங்கிரஸ் மந்திரிகள், காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர்கள், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி மெம்பர்கள், சகல சட்ட சபைகளிலுமுள்ள காங்கிரஸ் அங்கத்தினர்கள் முதலியோர் சிறை சென்றுவிட்டனர். இன்னமும் சுமார் 15000 சத்தியாக்கிரகிகள் சிறை செல்லக் காத்திருக்கிறார்கள். இது இரண்டாவது சத்தியாக்கிரகிகளின் ஜாப்தாவில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள்; காந்திஜியின் அனுமதி பெற்றவர்கள். இவர்களுக்குப் பின் இன்னம் பல ஆயிரக்கணக்கானவர் சிறை செல்லக் காத்திருக்கிறார்கள் ஆகவே, போராட்டம் இனிமேல் மும்முரமாக நடக்குமென்றே தெரிகிறது. காந்திஜியை எவ்வளவு காலத்துக்கு வெளியில் விட்டுவைத்திருக்க முடியுமோ, அவ்வளவு காலத்துக்கு அவரை சர்க்கார் விட்டு வைப்பார்களென்றே தெரிகிறது காங்கிரஸ்மீது தடை போட வேண்டுமென்ற எண்ணம் சர்க்காருக்கு இல்லைபோலும்! இன்றேல், இதற்குள் காங்கிரசுக்குத் தடை வந்தேயிருக்கும். அடுத்த ஜனவரி 8, 9-ந் தேதிகளில் காங்கிரஸ் நிலைமை தெரிந்துவிடுமென்று ராஷ்ட்ரபதி கூறுகிறார். இவர் கூறியதில் ஏதோ விசேஷம் அடங்கியிருக்கிறதென்றே நினைக்கிறேன். அது என்ன விசேஷம் என்பதைப் பொறுத்துப் பார்ப்போம்.

* * *

சிறை சென்ற தேச பக்தர்களுக்குப் பல கஷ்டங்கள் இருந்துகொண்டுதானிருக்கின்றன. வேலூர் சிறையிலிருந்த ஏ. பி. வகுப்புக் கைதிகள் எல்லோரையும் திருச்சி சென்டிரல் சிறைக்கு மாற்றியிருக்கிறார்கள். மாஜி முதன் மந்திரி ஆச்சாரியார், ராஜன் போன்ற சகல மாஜி மந்திரிகளையும் திருச்சி சிறைக்குக்கொண்டு போய்விட்டனர். சுமார் 150க்கு மேற்பட்ட தலைவர்களை வேலூரிலிருந்து, திருச்சிக்கு மாற்றிவிட்டனர். இன்னம் பலரையும் திருச்சிக்குக் கொண்டு வர ஏற்பாடு செய்து வருகிறார்கள். வேலூர் சிறையில் போதிய இடவசதி இல்லாததே, தலைவர்களைத் திருச்சி சென்டிரல் சிறைக்கு மாற்றியிருப்பதற்குக் காரணமென்று தெரிகிறது திருச்சி சிறையிலும் போதிய வசதி இல்லை; ஆகவே, நல்ல வசதி செய்து கொடுக்கப் பந்தல் போட்டு வருகிறார்கள். மின்சார ஏற்பாடுகளும் தீவிரமாக நடந்து வருகின்றன. சத்தியாக்கிரகிகளை அடைத்து வைத்திருக்கும் இடத்துக்கு இரும்புக் கம்பி வேலி போட்டு வருகிறார்கள். இராக் காலங்களில் அந்தக் கம்பிகளில் மின்சார சக்தியைச் செலுத்தவும் ஏற்பாடு செய்திருக்கின்றனர். அரசியல் கைதிகள் ஓடி விடாமலிருக்க இந்த ஏற்பாடுகளா? இதற்குமுன் சென்னை மத்திய சிறையிலிருந்த சிறை சூப்ரண்டெண்டு ஹௌள, திருச்சி சென்டிரல் சிறையில் சூப்ரண்டெண்டாக இருக்கிறார். இதற்குமுன் சத்தியாக்கிரகிகளை இவர் ரொம்பக் கடுமையாக நடத்திவந்ததாகக் கேள்வி. அவரிடமே மீண்டும் சத்தியாக்கிரகிகளைக் கொண்டுவந்திருப்பது விரும்பத் தக்கதல்ல. ஆனால், சர்க்கார் அவரைப் பெல்லாரி சிறைக்கு மாற்றி விட்டனர். இந்த விஷயத்தில் சர்க்கார் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளுவது பாராட்டத் தக்கதுதான். ஆனால், சத்தியாக்கிரகிகளைக் கூடுவிட்டுக் கூடுபாயும்படி செய்யும் வகுப்பு மாற்றம் இன்னமும் இருந்து கொண்டுதானிருக்கிறதென்றே தெரிகிறது. சர்க்கார் இது விஷயத்திலும் போதிய சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்!

* * *

நெருக்கடியான இந்தச் சமயத்தில் 42வது தமிழ் மாகாண அரசியல் மகாநாடு இம்மாதம் 29, 30ந் தேதிகளில் தஞ்சையில் ஆரம்பமாகிறது. அம் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க இருந்த காமராஜ நாடாரைக் கைது செய்து விட்டனர்; ஆகவே, வேலூர் உபயதுல்லா சாஹிப் அம் மகாநாட்டுத் தலைவராக வருகிறார். மகாநாட்டை ஆரம்பித்துவைக்க சரோஜினி தேவியைக் கேட்டுக்கொண்டார்கள். அவருக்கு வசதி இல்லாததால், சி. என். முத்துரங்க முதலியார் அம்மகாநாட்டை ஆரம்பித்து வைக்கிறார். தேச பக்தர், ஹாஜி மௌலானா சாஹேப் காங்கிரஸ் கொடியை ஏற்றி வைக்கிறார் அங்கு நடைபெறும் பொருட் காட்சியை மாஜி மந்திரி எஸ். ராமநாதன் ஆரம்பிக்கிறார். மகாநாட்டைச் சிறப்பாக நடத்தச் சிரத்தையோடு வேலை செய்து வருகிறார்கள். சுமார் 80 ஆயிரம் ஜனங்கள் தங்கியிருக்க வசதிகள் செய்திருக்கின்றனர். சுமார் 30 ஆயிரம் மக்கள், மகாநாட்டுக்கு வரக்கூடுமென எதிர்பார்க்கின்றனர். சத்தியாக்கிரகிகளாகச் சேர்ந்திருக்கும் அனைவரும், காங்கிரஸ் பிரதிநிதிகளாக மகாநாட்டுக்கு வரலாம். நெருக்கடியான நிலைமையில் கூடியிருக்கும் தஞ்சை மகாநாடு சிறப்பாக நடந்தேறும் என்பதில் சந்தேகமில்லை.

* * *

இதே சமயத்தில் மதுரையில் ஹிந்து மகாசபை மகாநாடு, நடைபெறுகிறது. ஆரிய சமாஜ மகாநாடு முற்றுப் பெற்றது. மதுரையில் இன்னம் சில சில்லறை மகாநாடுகள் நடைபெறுமென்று தெரிகிறது. சென்னையிலேயே முஸ்லிம் லீக் மகாநாடும் நடைபெறப் போவதாகக் கேள்வி. இதுவரையில் வடக்கே நடந்துவந்த மகாநாடுகள் தெற்கே திரும்பியிருப்பதின் ரகசியம் தெரியவில்லை. தெற்கே ஹிந்து-முஸ்லிம்கள், அண்ணன் தம்பிகள் போல் வாழ்ந்து வந்தனர் வடக்கேதான் ஹிந்து-முஸ்லிம்களுக்குள் தகராறு அதிகம். தெற்கே அந்தப் பேச்சே கிடையாது. இது வடநாட்டினருக்குப் பிடிக்கவில்லை போலும்! தெற்கேயும் ஹிந்து-முஸ்லிம் வகுப்புத் துவேஷத்துக்கு விதைபோட வந்திருக்கிறார்கள். இதற்குத் காரணம் வகுப்புவாதிகளும், வகுப்புவாதக் குட்டையில் ஊறிப்போன சு. ம. மட்டைகளுமே காரணமென்று சொல்லலாம். எத்தனை வகுப்புவாதிகள், எத்தனைவிதமான வகுப்புவாத விதை போட்டாலுஞ் சரி, தமிழ் நாட்டில் வகுப்புவாதத்தை வளர்க்க முடியாது என்பது திண்ணம். சு. ம. ஜஸ்டிஸ்காரர் வருடக்கணக்கில் குட்டிக்கரணம் போட்டுப் பார்க்கிறார்கள். வகுப்புவாதந் தலைகாட்டியதா? இல்லவே இல்லை. ஆகவே, இனிமேலும் அந்த வகுப்புவாதம் தலை காட்ட விடாமல் தமிழர், வகுப்பு வாதிகளின் தலையை மடக்குவார்களென்பதில் சந்தேகம் வேண்டாம்.

* * *

எல்லை மாகாணத்தில் சத்தியாக்கிரக போராட்டம் நடந்தே வருகிறது. ஆனால், சர்க்கார் அங்குள்ள சத்தியாக்கிரகிகளைக் கைது செய்ய மறுத்து வருகின்றனர். சத்தியாக்கிரகிகளைக் கைது செய்து வேறொரு இடத்தில் கொண்டுபோய் விடுதலை செய்துவிடுகின்றனர். இது சம்பந்தமாகக் காந்திஜி முழு விவரங்களும் அறிய விரும்புகிறார். எல்லை காந்தி அப்துல் காபர் கான், முழு விவரங்களும் தயாரித்து வருகிறார். இதற்கிடையில் லாகூர் வந்திருக்கும் மௌலானா அபுல்கலாம் அஸாதை பிஷாவாருக்கு வரும்படி அழைத்திருக்கிறார்கள். ராஷ்ட்ரபதி, ஸிந்து மாகாணத்தில் அமைத்த கூட்டு மந்திரி சபை நிதானமாக வேலைசெய்து வந்தது. அதை உருக்குலைக்கப்போன ஜின்னா சாஹேப் ஸிந்துவில் மீண்டும் குழப்பத்தை உண்டு பண்ணிவிட்டார். முதன் மந்திரி மீர்பாங்தே அலிகானை மீண்டும் லீகில் இழுத்துக்கொண்டார். லீக் மந்திரிகள் ராஜிநாமா செய்வார்களென்று தெரிகிறது. அப்படியானால், ஸிந்துவில் மீண்டும் நெருக்கடி ஏற்படுவது திண்ணம். இருந்து இருந்து பார் இடிவிழுவான் காரியத்தை யென்பதுபோல், ஜின்னா சாஹேப் வெறுங் குழப்பத்தை உண்டுபண்ணவே ஸிந்துவுக்குப்போகிறார் என்று அப்பொழுதே சொன்னேன். அது முற்றிலும் உண்மையாகிவிட்டது. ஸிந்துவில் நடப்பது போலவே, வங்காளத்திலும் நெருக்கடி அதிகரித்துவருகிறதென்று வங்க ஹிந்து மகா சபைத் தலைவர்கள் கூறுகிறார்கள். ஹக் மந்திரி சபை, வகுப்புத் துவேஷத்துடன் நிர்வாகம் நடத்தி வருவதாகக் கூறுகிறார்கள். அப்படியானால், வங்காளத்திலும் நெருக்கடி அதிகரிக்குமென்றே தெரிகிறது. ஸிந்துவிலிருந்து வங்காளத்துக்குப் பரவிய தொத்து நோய் அதி சீக்கிரத்தில் அஸாமுக்கும் பரவக்கூடும். பொதுவாக முஸ்லிம் லீக் மந்திரிகள் இருக்கும் மாகாணங்களில் எல்லாம் இந்த வகுப்புவாதப் பைத்தியமும், ஒருபட்சமான நிர்வாகமும் பரவியே தீரும். அதில் சந்தேகமே வேண்டாம்.

(அடுத்த பக்கம் பார்க்க)

ஹிட்லர் திருவிளையாடல்!

பால்கனில் வாலாட்டுகிருர்

பயமுறுத்தல் பிரசாரமா?

சென்ற மூன்று தினங்களாக ஜெர்மன் விமானங்கள் பிரிட்டன்மீது படையெடுத்து வரவில்லை. இதற்குக் காரணம் ஐரோப்பிய நிலைமையேயாகும். அங்கு அதிகக் குளிரும், பனியும் இருந்து வருகிறது. படையெடுக்க வசதி இல்லை. ஆனல், பிரிட்டிஷ் விமானங்கள், ஜெர்மனிமீது படையெடுத்துச் சென்று சிற்சில இடங்களைத் தாக்கின. அதிகப் பனியாக இருந்ததால், பிரிட்டிஷ் விமானங்கள் திரும்பிவிட்டன.

ஜெர்மனி நோக்கம்

ஜெர்மனியின் எதிர்காலத் திட்டம் என்னவென்பது தெரியவில்லை. அது எந்தத் தேசத்தின்மீது படையெடுத்துப் போர் ஆரம்பிக்கும் என்பதும் மர்மமாகவேயிருக்கிறது அடுத்த பிப்ரவரி மாதத்தில் மும்முரமான படையெடுப்பை ஆரம்பிக்க ஹிட்லர் யோசனை போட்டுக்கொண்டிருக்கிருரென்று தெரிகிறது. அதுவரையில் ஹிட்லர் என்ன செய்யப்போகிருர்? அவருடைய திருஷ்டி இப்பொழுது பால்கன் நாடுகள்மீது விழுந்திருக்கிறது. ருமேனியாவில் ஏராளமான ஜெர்மன் துருப்புகள் இருப்பதாகவும், கிரீஸ், பல்கேரியா, யுகோஸ்லாவியா எல்லைப்புறங்களை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதாகவும் தினசரி செய்திகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. இதாலிக்கு, ஹிட்லா அனுப்பிய ராணுவங்களும் இதாலியில் நடமாடிக் கொண்டிருப்பதாகக் கேள்வி. அப்படியானல் பால்கன் நாடுகளின் நடு நிலைமையை மீறி, ஹிட்லர் கிரீஸ் மீது படையெடுக்கப் போகிருரா; அல்லது, இது வெறும் பிரசார வேலையா?

திட்டமில்லை!

ஹிட்லரிடம் தற்போது ஒரு திட்டமும் இல்லை. ஆகவே, அவர் பால்கன் நாடுகளை பயமுறுத்தவும், பிரிட்டனைப் பூச்சாண்டி காட்டவும் இந்த ஏற்பாடு செய்திருக்கலாம்! பயமுறுத்தி எதிரியை ஜெயிப்பது ஹிட்லரின் தந்திரங்களில் ஒன்று. அந்தத் தந்திரத்தையே ஹிட்லர் இப்பொழுது உபயோகித்துப் பார்க்கிருர்போலும்! பால்கன் நாடுகள்மீது ஹிட்லர் கவனஞ் செலுத்துகிருரென்று தெரிந்தால், பிரிட்டன் சற்றுக் கவனக் குறைவாக இருக்கலாம். அந்நேரத்தில் ஹிட்லர் பிரிட்டனைத் தாக்குவதற்கு அனுகூலமாக இருக்கும். ஆனல், ஹிட்லரின் தந்திரம் இனிமேல், பிரிட்டனிடமோ, இதர நாடுகளிடமோ பலிக்காது என்பது நிச்சயம். சிறு தேசங்களை ஹிட்லர் ஆக்கிரமித்து ஜெயிக்கலாம். ஆனல், சூழ்ச்சியால் ஜெயிக்க முடியாது.

போக்கு வரத்துத் தடை

ஹங்கேரியாவில் பல ரயில்வே போக்குவரத்துக்கள் தடைபட்டிருப்பதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது. ஜெர்மன் ராணுவங்களை ஏற்றிச் செல்லுவதற்கே, ரயில்வே போக்குவரத்துக்கள் தடைபட்டிருப்பதாக நினைத்துவிட வேண்டாம். ரயில்வே இஞ்சின்களுக்கு வேண்டிய எண்ணெய் போதுமான அளவுக்கு இல்லாததால், ரயில் போக்குவரத்துக்களைக் குறைத்திருக்கலாம் இதை ஹிட்லர் அவருக்குச் சாதகமாக உபயோகித்திருக்கக் கூடுமென்று சிலர் யூகிக்கின்றனர். ருமேனியாவிலோ, ஹங்கேரியிலோ, ஏராளமான ஜெர்மன் படைகள் இல்லை; இரண்டொரு லக்ஷம் துருப்புகளே அங்கு இருப்பதாகக் கூறுகிருர்கள்.

பிரிட்டன் கடமை

ஜெர்மன் ராணுவங்கள் இதாலிக்குப் போனுலுஞ்சரி, போகா விட்டாலுஞ்சரி, பிரிட்டன் அசிரத்தையாக இருக்கக் கூடாது. மத்தியதரக் கடலிலும், ஆப்ரிக்காவிலும் பிரிட்டனுக்கு நல்ல வெற்றி கிடைத்திருக்கிறது. அச்சு நாடுகளுடன் சேர்ந்த இதாலி தோல்வியடைந்து தவிக்கிறது. இந்நேரத்திலதான் பிரிட்டன் இதாலியைத் தீவிரமாகத் தாக்க வேண்டும். முக்கியமான இடங்களைத் தாக்கி, அல்பேனியாவிலுள்ள இதாலி ராணுவங்களை அடியோடு வெருட்டிவிட வேண்டும் இதாலியை நாலா பக்கமும் தாக்கி, இதாலியைப் பணிய வைக்கவேண்டும் இதில் காலதாமதஞ் செய்தால், ஹிட்லர், முஸோலினிக்கு உதவிக்கு வரக் கூடும். அப்புறம், இதாலியைத் தாக்குவது கஷ்டமாகிவிடும். இதாலி தோல்வியடையக் கூடாது என்பது தான் ஹிட்லரின் நோக்கம். அதற்காகவே அவர் இதாலிக்கு ராணுவங்களை அனுப்பி வைத்திருக்கிருர். இன்னமும் அதிக ராணுவங்கள் வருவதற்குள் பிரிட்டன், இதாலியை முறியடிக்கவேண்டும். இதாலியை முறியடித்துவிட்டால், அப்புறம் ஜெர்மனியை தோற்கடிப்பது அவ்வளவு சிரமமல்ல. மத்தியதாக் கடலில் பிரிட்டனுக்கு பயமே இல்லை. இதாலிக்கும், பிரிட்டனுக்கும் சமரசத்தை ஏற்படுத்த அமெரிக்க சர்க்கார் முயற்சி செய்து வருவதாகக் கேள்வி இது எவ்வளவு தூரம் உண்மையென்பது தெரியவில்லை. சமரசம் ஏற்படுமென்று நம்பி, பிரிட்டன் சும்மா இருப்பது கூடாது. பிரிட்டன் வெற்றிக்கு இதுதான் சரியான சந்தர்ப்பம்; இந்தச் சந்தர்ப்பத்தைப் பிரிட்டன் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பால்கனில் திருவிளையாடல் புரியும் ஹிட்லர்.

சங்கநாதம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

காந்திஜி ஆரம்பித்திருக்கும் சத்தியாக்கிரகப் போராட்டத்தை சமஸ்தானங்களிலும் ஆரம்பிக்கலாமாவென்று பலர் காந்திஜிக்கு எழுதிக் கேட்டனர். சமஸ்தானங்களில் யுத்த சம்பந்தமாக எந்தவிதமான போராட்டத்தையும் ஆரமபிக்கக்கூடாதென்றும், சமஸ்தான மக்கள் தயாராக இருந்தால் ஸ்தலப் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள, நேர்மையான வழியில் சாத்விகப் போராட்டத்தை ஆரம்பித்துக்கொள்ளலாமென்றும் காந்திஜி அனுமதி கொடுத்திருக்கிருர். சுதேச சமஸ்தானங்களில் எந்த ரூபத்தில் போராட்டம் ஆரம்பமாகுமோ தெரியவில்லை. சுபாஷ் பாபுவின் போராட்ட ரூபம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். காங்கிரஸ் தலைவர் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொண்ட சரத் சந்திர போஸையே மீண்டும், வங்க சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிருர்கள். இந்தத் தேர்தலில் கலந்துகொண்ட 14 காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்மீது ராஷ்ட்ரபதி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிருர். அதற்காக மீண்டும் சுபாஷ்பாபு மௌலான அபுல்கலாம் அஸாத் மீது சீறி விழுந்திருக்கிருர். ராஷ்ட்ரபதிக்கு ஒன்றுமேதெரியாது என்று சொல்லுகிருர். போஸ் சகோதரர்களுக்கு இது பிறவிக் குணம்.

தஞ்சையில் நடைபெறும் 42-வது தமிழ் மாகாணக் காங்கிரஸ் அரசியல் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும், வேலூர்-உபயதுல்லா-சாஹேப்.

அகிலஇநதிய மாணவர் சம்மேளனத்திலேயே பிளவை உண்டுபண்ணிய சரத் சந்திரபோஸ் குமாரருக்கு, அந்தக் குணம் எங்கிருந்து வந்தது? வாழையடி வாழையாகவே அது வந்திருக்க வேண்டும். சுபாஷ் போஸின் திருக்கூட்டத்துக்கு என்று நற்புத்தி வருமோ ஆண்டவனுக்கே வெளிச்சம்! அவர்களுக்கு நல்ல புத்தி உதயமானுலொழிய வங்கத்தில் ஒரு போதும் ஒற்றுமை ஏற்படாது; அங்கு ஒற்றுமை இல்லாத வரையில், லீகருக்கும், ஹக்குக்கும் நல்ல வேட்டைதான்!

ஹனுமான் ஜோதிட சாலை

திருத்தணியிலுள்ள ஹனுமான் ஜோதிட சாலை சென்ற 25 வருடங்களாக, ஹனுமத் உபாசி, வி. கே. சடகோபாச்சாரியார் தலைமையில் நடந்து வருகிறது. இவரைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்திவைக்க வேண்டிய அவசியமே இல்லை. காந்திஜி சிறைப்பட்டிருந்த காலத்தில், அவர் விடுதலையைப்பற்றி முன்னதாகவே, இவர் ஜோசியத்தின் மூலம் அறிவித்திருந்தார். ஆகவே, இவரைக் "காந்தி ஜோசியர்" என்று எல்லோரும் பாராட்டி வந்தனர். சமீபத்தில் நடந்த அமெரிக்கத் தலைவர் தேர்தலிலும் இவர் திறமையைக் காட்டினர். ரூஸ்வெல்ட் மீண்டும் அமெரிக்கத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவார் என்று உறுதியாகச் சொன்னர். இதிலும், இவர் ஜோசியம் பலித்தது; இதுபோன்று இன்னம் பல விஷயங்களை முன்னடியே அறிவித்திருக்கிருர். இவருடைய திறமையைக் கருதி அநேகர் இவருக்கு நற்சாட்சிப் பத்திரங்கள் அளித்திருக்கின்றனர். வி. கே. சடகோபாச்சாரியாருக்கும், அவருடைய ஹனுமான் ஜோதிட சாலைக்கும் சர்வமங்களமுண்டாகுக.

உடனே தேவை

கீழ்க் கண்ட ஊர்களுக்கு டிபாஸிட் கட்டக் கூடிய நாணயமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஊர்		டிபாஸிட் ரூ.
பொள்ளாச்சி	,,	25
தர்மபுரி	,,	20
நாட்டரசன்கோட்டை		20
திருச்செந்தூர்	,,	20
பொன்மலை	,,	50
ஸ்ரீரங்கம்	,,	15
திருமங்கலம்	,,	20
அருப்புக்கோட்டை	,,	20

மானேஜர், "தமிழ் மணி"

தமிழ் மணி

சென்னை — விக்கிரம வருஷ மார்கழி மாதம் 15உ (29—12—1940)

புது வருடம்

1940ம் வருடம் முடிவடைகிறது; அடுத்த புதன்கிழமையன்று 1941-ம் வருடம் ஆரம்பிக்கிறது. இப் புது வருடம் எப்படி இருக்குமோ சொல்ல முடியாது. ஆனால், உலகத்தைப் பிடித்த தொல்லைகள் ஒழிந்து, உலக மக்கள் எல்லோரும் க்ஷேமமடையவேண்டும்; இப் புது வருடம் எல்லோருக்கும் பாக்கியமான வருடமாக இருக்க வேண்டுமென்பதே எமது பிரார்த்தனை. இப் புது வருடத்தில் "தமிழ் மணி" அன்பர்கள் எல்லோருக்கும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

இவ்வருடம்

புது வருடம் ஆரம்பிக்கு முன் இவ்வருடத்தில் நடந்த முக்கியமான சம்பவங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். 1939-ம் வருடம்செப்டம்பர் மாதம் ஆரம்பித்த கொடிய யுத்தம் 16 மாதங்களாக நடந்து வருகிறது. ஜெர்மானியர் ஐரோப்பாவில் பல தேசங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். போலந்து, டென்மார்க், நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய தேசங்களில் நாஜியர் ஆட்சி இருந்துவருகிறது. ருமேனியாவிலும் ஜெர்மானியர் ஆட்சியே இருந்துவருகிறதென்றுசொல்லலாம். பாக்கியுள்ள பால்கன் நாடுகளையும் ஹிட்லர் வாயில் போட்டுக்கொள்ளத் தருணம் பார்த்துக்கொண்டிருக்கிறார். பிரிட்டனை ஜெயிக்க, சென்ற ஆறு ஏழு மாதங்களாக முயற்சி செய்தும் ஹிட்லரின் முயற்சி பலிக்கவில்லை. தினசரி ஜெர்மன் விமானங்கள் பிரிட்டன்மீது படையெடுத்துக்கொண்டே இருக்கின்றன. பிரிட்டனுக்கு அபார உயிர்ச்சேதம்; ஏராளமான பொருள்சேதமும் உண்டு; என்றாலும், பிரிட்டனை ஜெயிக்க ஹிட்லரால் முடியவில்லை.

பிரிட்டன் திறம்

தற்காப்பிலேயே பிரிட்டன் கண்ணும் கருத்துமாக இருந்துவருகிறது. என்றாலும், பிரிட்டிஷ் விமானங்களும் பதிலுக்குப்பதில், ஜெர்மனி மீதும் ஜெர்மனி ஆதிக்கத்திலிருக்கும் பிரதேசங்கள் மீதும் வெடிகுண்டுகளை எறிந்து, பெருஞ் சேதம் விளைவித்து வருகின்றன. பிரிட்டன் தற்காப்புடன் மத்தியதரக் கடலையும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யங்களையும் தீரத்துடன் காப்பாற்றி வருகிறது. பிரிட்டனுக்கு அமெரிக்கா உதவி தாராளமாக கிடைத்து வருகிறது.

இதாலி தோல்வி

பிரான்ஸ், ஜெர்மனிக்குச் சரணதியடையும் தருவாயில், இதாலி ஜெர்மனியுடன் சேர்ந்து யுத்தத்தில் இறங்கியது. ஐரோப்பாவில் நடந்த யுத்தம் ஆப்ரிக்காவுக்கும் பரவியது. பிரிட்டனை நாலா பக்கங்களிலும் நெருக்க ஹிட்லரும், முஸோலினியும் முயற்சித்தனர். ஆனால், திடீரென யுத்தப் போக்கு மாறியது. முஸோலினி கிரீஸ்மீது படையெடுத்தார்; அதுவே முஸோலினிக்குச் சனியுகை வந்து முடிந்தது! கிரீஸில், இதாலிக்குப் படுதோல்வி; இன்னமும் தோல்வி அடைந்தே வருகிறது. இதாலி ஜெயித்த அல்பேனியாவில் பெரும் பாகம் இன்று கிரீஸ் ராணுவங்களிடமிருக்கிறது. மத்தியதரக் கடலில் இதாலி கடற்படைகள் தலைகாட்டுவதற்கே வழியில்லை. இதாலியில் குழப்பம்; முஸோலினிமீது அதிருப்தி; அந்த அதிருப்தி அதிகரித்து வருகிறது. முஸோலினியின் தோல்வி, ஹிட்லரைக் கூட ஒரு கலக்குக் கலக்கிவிட்டது!

இதர தேசங்கள்

ரஷியா பழைய நிலைமையில் தானிருக்கிறது. நடு நிலைமை வேதாந்தம்பேசிக்கொண்டே, அதற்கு வேண்டிய பிரதேசங்களைக் கைப் பற்றி வருகிறது. ருமேனியாவில் ஒரு பாகத்தை அது எடுத்துக் கொண்டது. ருமேனியா மன்னர் முடிதுறந்து ஓடிவிட்டார். நார்வே மன்னர், ஹாலந்து ராணி முதலியோரும் நாடு துறந்து லண்டனிலிருக்கிறார்கள். பெல்ஜிய மன்னர் நாஜியர் கைதியாக இருக்கிறார். ஹங்கேரி, பல்கேரியா, யுகோஸ்லாவியா முதலிய பால்கன் நாடுகளின் கதி என்னவாகுமோ தெரியவில்லை. அந்த நாடுகளும், துருக்கியும் இன்னமும் நடு நிலைமையே வகிக்கின்றன. அயர்லாந்தும், ஸ்விட்சர்லாந்தும் நடுநிலைமை தேசங்களாகவே இருக்கின்றன.

கிழ் தேசங்கள்

ஆப்ரிக்கா யுத்தத்திலும் முஸோலினிக்குத் தோல்விதான்; பிரிட்டிஷ் ராணுவங்கள் இதாலி ராணுவங்களை முறியடித்து, இதாலிக்குச் சொந்தமான லிபியாவுக்குள் பிரவேசித்து விட்டன; லிபியாவில் தீவிரமாக முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றன. இவ் வருடத்தில் பிரிட்டனுக்கு நல்ல வெற்றி. நாஜி ஜெர்மனியும், பாஸிஸ்ட் இதாலியும் தோல்வியடைந்தன அபிசீனியாவிலும் இதாலிக்கு எதிராக கிளர்ச்சி அதிகரித்து வருகிறது. அபிசீனியாவை இதாலியர் இழக்க நேரிட்டால்கூட அதில் ஆச்சரியமொன்றுமில்லை!

சீன-ஜப்பான்

சீனாவில் பெரும்பாகத்தை ஜப்பான் கைப்பற்றியிருந்தது. ஆனால், ரோம்-பேர்லின் அச்சில் ஜப்பான் சேர்ந்த காலமுதல் அதற்குக் கேடு காலம் ஆரம்பித்தது! சீனர், பல போர் முனைகளில் ஜப்பானை முறியடித்து வருகின்றனர். ஜப்பானியர், சீன யுத்தத்தில் கவனஞ் செலுத்துவதைவிட, இந்தோ-சீனா விஷயத்தில்தான் அதிகக் கவனஞ் செலுத்தி வருகிறார்கள். அங்கு ஏராளமான ஜப்பான் ராணுவங்களை அனுப்பிவைத்திருக்கின்றனர். இந்தோ-சீனா-சையாம் யுத்தம் நடந்து வருகிறது. இந்த யுத்தத்தில் இதுவரையில் வெற்றி தோல்வி தெரியவில்லை. ஆனால், 1941ம் வருடத்தில் ஜப்பானியரை சைனாவிலிருந்து வெருட்டி விடுவதாகச் சீன ஜெனரல்கள் கூறுகிறார்கள். புது வருடம் அவர்களுக்கு ஒரு பெரிய வெற்றியைக் கொடுக்குமென்ற நம்பிக்கை இருந்து வருகிறது. சீனாவுக்கு ரஷியாவும், பிரிட்டனும், அமெரிக்காவும் யுத்த தளவாடங்கள் கொடுத்து உதவி வருகின்றன.

இந்தியா

இந்திய அரசியல் நெருக்கடி தீர்ந்தபாடில்லை. சென்ற வருடத்தை விட இவ்வருடம் அந்த நெருக்கடி இன்னமும் அதிக நெருக்கடியிலிருக்கிறது. காங்கிரஸ் கோரிக்கைகளுக்குப் பிரிட்டிஷார் இணங்கிவர மறுத்துவிட்டனர். ஆகவே, காந்திஜி சாத்வீகச் சட்டமறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார். ஏராளமான இந்தியத் தலைவர்கள் இன்று சிறையிலிருக்கின்றனர். என்றாலும், பிரிட்டிஷார் பழைய பல்லவியையே பாடிக்கொண்டிருக்கின்றனர்! இந்திய அரசியல் நெருக்கடி தீர்ந்தாலொழிய, உலகம் க்ஷேமமடைய முடியாது பிரிட்டனுக்கும் அதனால் கஷ்டந்தான். புதிய வருடத்திலாவது பிரிட்டிஷாருக்கு நல்லபுத்தி வருமென்று நம்புகிறோம். பாழும் யுத்தம் சீக்கிரத்தில் முடிவடைந்து, உலக மக்கள் இன்புற ஆண்டவன் அருள்புரிவானாக.

யாருக்குப் பிரதிநிதி?

இந்தியாவிலுள்ள 7கோடி முஸ்லிம்களுக்கும் லீகே ஏக பிரதிநிதி சபை என்பதை ஒப்புக்கொள்ளும்படி ஜின்னா வற்புறுத்தி வருகிறார். லீக்-காங்கிரஸ் சமரசத்துக்கு இதுதான் பெரிய முட்டுக்கட்டையாக இருக்கிறது இந்திய முஸ்லிம்கள் எல்லோருக்கும் லீக் ஒன்றே பிரதிநிதி சபை என்பதை காங்கிரஸ் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டது அதற்குக் காரணம் என்ன? இந்திய முஸ்லிம்கள் 7 கோடி பேர்; இவர்களில் மோமின் முஸ்லிம்கள் மட்டும் 4 கோடி; இவர்களில் பெரும்பாலோர் தொழிலாளர். இவர்கள் லீகை பிரதிநிதி சபையாக ஒப்புக்கொள்ளமறுக்கின்றனர். மோமின்கள் போக அஹ்ரார் முஸ்லிம்களிருக்கின்றனர்; இவர்களும் பெரும்பான்மையோர் லீகை ஏற்றுக்கொள்ளவில்லை. ஜமியத்-உல்-உலாமா முஸ்லிம்களும், லீகை பிரதிநிதி சபையாக ஏற்றுக்கொள்ளவில்லை. லீகில் இருப்பதைவிடக் காங்கிரசில் ஏராளமான முஸ்லிம்கள் இருக்கிறார்கள். இந்த நிலைமையில், 7 கோடி முஸ்லிம்களுக்கும் லீகே ஏக பிரதிநிதி சபை என்பதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

ஏழைகள் கதி என்ன?

முஸ்லிம் லீக் ஏழை முஸ்லிம்களின் பிரதிநிதி சபையல்ல; அது பணக்கார முஸ்லிம்களின் பிரதிநிதி சபையென்று சொல்லலாம். இதுவரையில் ஏழை முஸ்லிம்களுக்காக லீக் செய்த சேவை ஒன்றுமே இல்லை. ஆகவே, லீகிற்கு, ஏழை முஸ்லிம்கள் ஆதரவு கிடையாது. லீகிற்கு, முஸ்லிம் மக்களிடையே எவ்வளவு செல்வாக்கு இருக்கிறதென்பதை அறியவேண்டும். அதற்கு ஒரே வழிதானுண்டு. இந்தியாவிலுள்ள சகல முஸ்லிம்களிடம் வோட் எடுத்துப் பார்க்கவேண்டும். மெஜாரிட்டி முஸ்லிம்கள் லீகை ஆதரிப்பார்களேயாயின், லீகை முஸ்லிம்களின் ஏக பிரதிநிதி சபையென்பதை ஒப்புக்கொள்ளலாம். இன்றேல், அதை முஸ்லிம்களின் ஏக பிரதிநிதி சபை அல்லவென்பதை லீகர் ஒப்புக்கொள்ளுவார்களா?

சிங்களவர் சீற்றம்!

இலங்கை இந்தியர்மீது சிங்களவருக்குள்ள சீற்றம் குறையவில்லை. இலங்கை இந்தியரை எப்படியும், இலங்கையிலிருந்து மூட்டை முடுச்சுகளுடன் கப்பலேற்றிவிடவே சிங்களவர் உறுதிகொண்டிருக்கிறார்கள். இந்தியருக்குரிய அரசியல், பொருளாதார உரிமை கொடுக்க அவர்கள் தயாராக இல்லை. இந்திய சர்க்காருடன் வர்த்தக ஒப்பந்தம் பேச இந்தியாவுக்கு, வந்த மந்திரி சேனநாயக்க இதை பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். இலங்கைஇந்திய வர்த்தக ஒப்பந்தப் பேச்சு முறிந்ததற்கு இந்தியரின் அதிகப்படியான உரிமையே காரணமென்று சொல்லுகிறார்.

பாகுபாடு

இலங்கைத் தோட்டங்களிலுள்ள இந்தியத் தொழிலாளர், இதர இந்தியர் என்று பிரித்துவைக்கின்றனர். இந்தியத் தொழிலாளர் உதவி வேண்டுமோம்; அவர்கள் இலங்கையில் இருக்கலாம்! ஆனால், இதர இந்தியர் மூட்டை கட்டவேண்டுமோம்! இலங்கையிலுள்ள தோட்டத் தொழிலாளருக்குச் சம உரிமை கொடுக்க சிங்களவர் தயாராக இல்லை. இலங்கையில் 5 வருடங்களுக்கதிகமாக வசித்துவந்த இந்தியருக்குக்கூட சம உரிமை கொடுக்கச் சிங்களவர் மறுக்கின்றனர். அப்படியானால், இலங்கையருக்கு, இந்தியர் சலுகை காட்டவேண்டிய அவசியம் என்ன வந்தது? இலங்கை இந்தியரை வெருட்டச் சிங்களவர் துணிவார்களேயானால், இந்தியரும் பதிலுக்குப் பதில் செய்ய முடியுமென்பதைச் சிங்களவர் அறிந்துகொள்ளுவார்களாக.

மணியோசை

எஸ். சீனிவாச அய்யங்கார்,
சென்னை.

பழந் தலைவரே,

ஒரு காலத்தில் நீங்கள் பெரிய காங்கிரஸ் பக்தர்; கயா காங்கிரஸுக்குத் தலைவராகவும் இருந்தீர்கள். அப்பொழுதெல்லாம் உங்களுக்குக் கதர்மீதும், சத்தியாக்கிரகத்தின்மீதும் நம்பிக்கை இருந்தது. ஆனால், இன்றே, அந்த நம்பிக்கையெல்லாம் பறந்து விட்டது! ஏன்? மீண்டும் தலைவர் பதவி கிடைக்காததினலா, அல்லது அதற்கு வேறு காரணமுண்டா? வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்குக் கதரோ, தக்ளியோ பயன்படாது; அதில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையென்று பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறீர்கள். அது மட்டுமல்ல; வேலையில்லாத் திண்டாட்டத்துக்குத் தற்கால கல்வி முறை காரணமல்ல வென்றும் குறிப்பிட்டீர்கள். கதரும், தக்ளியும் எத்தனையோ ஆயிரக்கணக்கான மக்களுக்குக் கால் வயிற்றுக் கஞ்சியாவது வார்ப்பது உங்களுக்குத் தெரியுமா? வேலையின்றி, உண்ண உணவின்றி, பசி பட்டினி கிடந்து மடிவதிலும், கால் வயிற்றுக் கஞ்சி குடித்து உயிருடனிருப்பது உசிதமல்லவா? ஆம்; கொழுத்த பணக்காரராகிய "உங்களுக்கு ஏழைகளின் கஷ்டம் தெரியாது! இந்தியாவில் கோடிக்கணக்கான மக்கள் பசி பட்டினி கிடந்து மடிகின்றனர். இன்னம் பல கோடிக்கணக்கான மக்கள் அரை வயிறு, குறை வயிறாகச் சாப்பிட்டுக் காலங்கடத்துகிறார்கள். அந்தக் கஷ்டங்களெல்லாம் உங்களுக்குத் தெரியாது; ஏழைகள் கஷ்டத்தை ஏழைகளே அறிவார்கள். உங்களைப் போன்ற பணக்காரரால் அதை அறிய முடியாது. இது ஒருபுறமிருக்கத், தற்கால கல்வி முறை வேலையில்லாத் திண்டாட்டத்துக்குக் காரணமல்லவென்று சொன்னீர்கள். இந்தக் கல்வி முறையே வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு மூல காரணமென்பது பல அறிஞர்கள் அபிப்ராயம். தற்காலக் கல்வி முறை மாணவர்களை வெறும் புத்தகப் பூச்சிகளாக வெளியில் அனுப்புவது உங்களுக்குத் தெரியுமா? கைத்தொழில் இன்னதென்று அறியாமல், சுயமாகப் பிழைக்க வழியின்றி, வேலை தேடி ஊர் ஊராக அலைகின்றனர். ஒரு குமஸ்தா வேலைக்குக் கூடக் குட்டிக்கரணம் போடுகிறார்கள் ஆனால், உங்கள் நிலைமையோ வேறு; அதிர்ஷ்டவசமாகச் சட்டம் படித்து, நிறையப் பணம் தேடிவிட்டீர்கள் ஆதலால், இந்தக் கல்வி முறையின் கேடுகள் உங்கள் கண்களுக்குப் புலப்படவில்லை. உங்களைப்போல் எல்லோரும் மண்டை நிறையச் சட்டமூளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டாம் அது தவறு; ஆதலால், இனிமேல் உங்கள் நிலைமையை ஒப்பிட்டுப் பேச வேண்டாம். காலத்தின் நிலைமையைக் கவனித்துப் பேசுங்கள். இன்றேல், உங்கள் பேச்சுக்கு மதிப்பில்லாது போய்விடும்.

டிங்—டாங்

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்,
ஈரோடு.

சு. ம. "ஆத்மா"!

எந்த முக்கியமான விஷயம் வந்தாலும், "பெரியார்" அப்பொழுதே சொன்னார், "பெரியார்" ஏற்கனவே அதைப்பற்றிக் கூறியிருக்கிறார் என்று. நீங்களே உங்கள் பத்திரிகையில் எழுதி வருகிறீர்கள். அதே போல் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றியும், நீங்கள் ஒரு பெரிய திட்டம் போட்டு வைத்திருப்பதாகக் கூறுகிறீர்கள். அந்தத் திட்டத்தைப்பற்றி, ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் கூட ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாகத் தெரிகிறது. நீங்கள் திட்டம் போட்டு என்ன பலன்; தீர்மானஞ் செய்துதான் என்ன பயன்? உங்கள் திட்டம் பயன்பட வேண்டாமா? வெறுமனே அதைப்பற்றி டமாரம் அடித்துக் கொள்ளுவதால் வேலையில்லாமல் திண்டாடுகிறவர்களுக்கு வேலை கிடைத்துவிடுமா? இல்லை; வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க நீங்கள் போட்டிருக்கும் திட்டம் என்ன? பெரிய கைத்தொழிற் சாலைகளை அமைக்க வேண்டும்; அந்தக் கைத்தொழிற்சாலைகள் சர்க்கார் பொறுப்பில், சர்க்கார் நிர்வாகத்தில் நடந்து வரவேண்டும். இதுதான் உங்களுடைய பெரிய திட்டமா? அப்படியானால் உங்கள் திட்டத்தில் புதிதாக ஒன்றுமில்லை. காங்கிரஸ் தலைவர்கள் பல வருடங்களுக்கு முன்னமே இந்தத் திட்டம் போட்டிருக்கிறார்கள். ஆனால், அனுபவத்தில் அந்தத் திட்டத்தை வேலை செய்து வர அவர்களுக்குச் சந்தர்ப்பம் இல்லாது போயிற்று. இன்றேல், அவர்கள் திட்டத்தை அமுலுக்குக் கட்டாயம் கொண்டுவந்தே இருப்பார்கள். வேலையில்லாத்திண்டாட்டம் மகாக் கொடியது வறுமையிலும் கொடியது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், உங்கள் கட்சி 17 வருடங்களாக ஆட்சியிலிருந்தும், என்ன சாதித்திருக்கிறது? அந்தக் காலத்தில் உங்கள் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஏன் வழி செய்யவில்லை? இன்று ஜம்பம் பேசும் உங்களுக்கு அந்தக் காலத்தில் புத்தி எங்கே போயிருந்தது? ஊர் சுற்றவும், காடு மேயவும் போயிருந்ததா? உயர்ந்த பட்டமிருந்திருக்கிறது! அதிகாரம் கைக்கு வந்தால் வானத்தை வில்லாக வளைப்போம்; கடல் மணலைக் கயிறாகத் திரிப்போம் என்றெல்லாம் அளப்பதால் பிரயோஜனமில்லை! வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கச் சக்தியிருந்தால் அதைச் செய்துமுடிக்கவேண்டும்; இன்றேல், பேசாமல் ஒதுங்கிவிட வேண்டும். சர்க்கார் தலையில் அந்தப் பாரத்தைப் போட்டு, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வற்புறுத்தலாம்; வீண் டம்பப் பேச்சால் எதுவும் சாதிக்கமுடியாது. மந்திரத்தில் மாங்காய் விழாது என்பது ஞாபகமிருக்கட்டும்! ஏழை ஜனங்களை ஆசை வார்த்தை காட்டி மோசம் பண்ண வேண்டாம்!

டிங்—டாங்

எம். பி. ரங்கசாமி ரெட்டியார்,
திருவண்ணாமலை.

சீர்திருத்த வீரரே!

அருணாசலேசுவர சுவாமி தேவஸ்தானம் தர்மகர்த்தாவாக இருந்து நீங்கள் செய்துவரும் நல்ல சீர்திருத்தங்களைப் பாராட்டுகிறேன். அருணாசலேசுவரர் ஆலயத்தில் பார்ப்பனர் மட்டும் அர்த்த மண்டபம் வரை செல்ல உரிமை பெற்றிருந்தார்கள். இனிமேல் யாராயிருந்தாலுஞ் சரி, பார்ப்பனராக இருந்தாலுஞ் சரி; தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்தாலுஞ் சரி, எல்லோரும் பொதுவாக ஹிந்துக்கள் சுவாமி தரிசனஞ் செய்யும் இடத்திலிருந்தே சுவாமி தரிசனஞ் செய்யவேண்டுமென ஒரு உத்திரவை அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறீர்கள். இது பார்ப்பனருக்குக் கடுங் கோபத்தை மூட்டியிருக்கலாம். ஒருவர் ஆவேசம் பொங்க உங்களிடம் கேட்ட கேள்விகளுக்கு ஆணித்தரமான பதில் கொடுத்திருக்கிறீர்கள். பிறப்பால் பார்ப்பனர் உயர்ந்தவரா என்ற கேள்விக்கு நீங்கள் கொடுத்த பதில் போற்றத் தக்கது. பிறப்பால் உயர்ந்தோரென்றும், தாழ்ந்தோர் என்றும் கிடையாது. கடவுள்முன் எல்லா மக்களும் ஒன்றே. கர்மப் பயனுல், பார்ப்பனர் உயர்ந்தோர் என்று கூறுவதும் தவறு; கர்ம பலனை எடுத்துக் கொண்டால், பிரம்ம ஞானமுடையவர்களே பிராம்மணர்; மற்றவர் எவரும் பிராமணர் அல்லர். சோறு வியாபாரஞ்செய்யும் எவரும் சண்டாளர்களே! இன்று சோறு வியாபாரஞ் செய்யும் பார்ப்பனர் பலர்; அவர்கள் அனைவரும் சண்டாளர் என்பதைப் பார்ப்பனர் ஒப்புக்கொள்ளத் தயாரா? மேலும், கல்விக்காகவும் உத்தியோகங்களுக்காகவும் பார்ப்பனர் கடல் கடந்து செல்லுகிறார்கள்; இது வைதீகத்துக்கும், பார்ப்பனர் கூறும் சனாதன தர்மத்துக்கும் முற்றிலும் விரோதமானது. இந்த நிலைமையில் பார்ப்பனர் மட்டும் கோவிலுக்குள் அர்த்தமண்டபம் வரையில் செல்ல என்ன உரிமை இருக்கிறது? ஒரு உரிமையும் கிடையாது. உங்களைப்போல் சகல தர்ம கர்த்தாக்களும், கோவில்களைச் சீர்திருத்தம் செய்ய முன்வருவார்களேயானால், கோவில்கள் யாவும் புனிதத்தன்மையடையு மென்பதில் சந்தேகமில்லை. பிறப்பில் உயர்வு, தாழ்வு கற்பிக்கும் கொடுமை தானகவே ஒழிந்து போகும் என்பது நிச்சயம்.

டிங்—டாங்

மகாத்மா நாராயண சுவாமி,
மதுரை.

சுவாமிகாள்!

மதுரையில் நடந்த ஆரிய சமாஜ மகாநாட்டுக்கு நீங்கள் தலைமை வகித்தீர்கள். அப்பொழுது, ஆரிய, திராவிட தர்மத்தைப்பற்றிப் பேசினீர்கள். ஆனல், அதைப்பற்றி தெளிவு படுத்தாமல் விட்டு விட்டீர்கள் "திராவிட கலை பண்புக்கும், ஆரிய கலை பண்புக்கும் வித்தியாசமுண்டு என்று இந்தப் பாகங்களில் வற்புறுத்தப் படுகிறது. ஆரியன் என்பதன் அர்த்தம் தர்மத்தைக் கடைப் பிடிப்பவன் என்பதே" என்று சுருக்கமாகக் கூறிமுடித்து விட்டீர்கள். ஆனல், என் சந்தேகம் தீரவில்லை. ஆரிய, திராவிட கலைப் பண்புக்கு வித்தியாசமுண்டா, இல்லையா? வித்தியாசம் இருக்குமேயானல், யாருடைய கலைப் பண்பு உயர்ந்தது? ஆரியர், தர்மத்தைக் கடைப் பிடிப்பார்களென்று சொல்லுகிறீர்கள்; அப்படியானல், திராவிடர் தர்மத்தைக் கடைப் பிடிப்பவர்கள் அல்லவென்பது உங்கள் கருத்தா? உங்கள் கருத்தைத் தெளிவாக எடுத்துக் காட்ட வேண்டியது அவசியம். ஆரியர், திராவிடர் கலைப் பண்பைப்பற்றி நீங்கள் பேசியிருக்கவே கூடாது. பேச ஆரம்பித்தால் அதை நன்கு தெளிவுபடுத்தியிருக்கவேண்டும். தெளிவுபடுத்தாத வரையில், அது பல சந்தேகங்களுக்கும் இடங்கொடுக்குமென்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன். ஆதலால், நீங்கள் அரை குறையாக வியாக்யானஞ் செய்த ஆரிய, திராவிட கலைப் பண்புப்பற்றி உங்கள் அபிப்ராயத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். உங்கள் கருத்தை அறிந்துகொள்ளப் பலர் ஆவலோடு காத்துக் கொண்டிருப்பார்களென்பதில் சந்தேகமில்லை.

டிங்—டாங்

கர்னல் அமெரி,
லண்டன்.

இந்திய மந்திரியே,

சமீபத்தில் இந்தியருக்கு ஒரு உபதேசஞ்செய்தீர்கள்; அந்த உபதேசம் என்ன தெரியுமா? "இந்தியாவே பிரதானம்!" என்பதுதான். உங்களுக்கு ஏட்டிக்குப் போட்டியாக ஐக்ய மாகாண லீகர் புறப்பட்டிருக்கிறார்கள். சமீபத்தில் நடந்த லீக் மகா நாட்டில் "இஸ்லாமே பிரதானம்!" என்று அம் மகா நாட்டில் தீர்மானஞ்செய்து, அந்தத் தீர்மானத்தை உங்களுக்கு அனுப்பிவைத்திருக்கிறார்கள். ஐக்ய மாகாண முஸ்லிம்களின் மத வைராக்கியத்தையும், தீரத்தையும் பாராட்டி, நீங்கள் உடனே கூட ஒரு தந்தி கொடுப்பீர்களென்று நம்புகிறேன்.

டிங்—டாங்

ஔரங்கசீப் கான்,
பிஷாவார்.

லீக் சூரரே!

காங்கிரஸ் ஆரம்பித்திருக்கும் சாத்வீகப் போராட்டத்தில் லீகர் கலந்து கொள்ள நீங்கள் கொடுத்திருக்கும் நிபந்தனைகள் ரொம்ப விசித்திரமானவை! காங்கிரஸ் சத்தியாக்கிரக இயக்கத்தை நிறுத்திவிட வேண்டும். லீகுடன் சமரசஞ்செய்து கொண்டு, லீகே இந்திய முஸ்லிம்கள் அனைவரின் ஏக பிரதி நிதி சபை யென்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்; அது மட்டுமா? லீகின் பாகிஸ்தான் திட்டத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நிபந்தனைகளைக் காங்கிரஸ் ஒப்புக்கொண்டால், காங்கிரஸ் நடத்தும் போராட்டத்தில் லீகரும் சேர்ந்துகொள்ளுவதாகச் சொல்லுகிறீர்கள். இந்த நிபந்தனைகளெல்லாம் எதற்கு? ஒரே ஒரு நிபந்தனை போட்டால் போதும். காங்கிரஸ் லீகிற்குச் சரணுகதியடையும்படி ஒரேநிபந்தனை போட்டால் போதும். இதற்காகத் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவானேன்? உங்கள் நிபந்தனைகளைக் காங்கிரஸ் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது; அவை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிபந்தனைகளும் அல்ல; ஆகவே; உங்கள் காலத்தை வீணுக்கவேண்டாம்!

டிங்—டாங்

வி. டி. சவர்க்கார்,
மதுரை.

ஹிந்துத் தலைவரே,

மதுரையில் நடைபெறும் ஹிந்து மகாசபை மகா நாட்டுக்கு மீண்டும் நீங்களே தலைவராக வந்திருக்கிறீர்கள். லீக் ஜின்னாவுக்கு நீங்கள் சரியான ஜோடிதான்! நீங்களே ஹிந்து மகா சபையின் சாஸ்வத தலைவராக இருந்தால்கூடப் பாதகமில்லை. இது ஒரு புறமிருக்கட்டும்; சென்னைக்கு வந்ததும், இந்திய மந்திரி அமெரிக்கு நீங்கள் சரியான "டோஸ்" கொடுத்தீர்கள். "பிரித்தாளும் கொள்கையையே இந்திய மந்திரி அமெரி இன்னமும் பின்பற்றி வருகிறார்; ஹிந்துக்களுக்கு விரோதமாக முஸ்லிம்களையும், முஸ்லிம்களுக்கு விரோதமாக ஹிந்துக்களையும் தூண்டிவிடுகிறார். இந்தக் கொள்கை எவ்வளவு காலத்துக்கு நீடித்திருக்கும்?" என்று நீங்கள் கேட்கிறீர்கள். மெய்தான்; இவ்வளவு காலத்துக்கு நீடித்திருந்தது போதாதா? இன்னமும் எவ்வளவு காலத்துக்கு நீடித்திருக்குமோ யார் கண்டது? லீகுக்கு ஒரு ஜின்னாவும், ஹிந்து மகா சபைக்கு உங்களைப் போன்ற ஒருவரும் தலைவராக இருக்கும் வரையில், அமெரியின் பிரித்தாளும் தந்திரம் வேருன்றியே தீரும்; அதில் சந்தேகமே வேண்டாம்.

டிங்—டாங்

தமிழ் சினிமா

சகுந்தலை கொலை!

கண்றாவிக் காட்சி!

காளிதாசன் துடிப்பு!

(சினிமாப் பிரியன்)

தமிழ் சினிமாப் படங்களைப் பார்க்கும்போது பரிதாபப் படாமலிருக்க முடியவில்லை. தமிழ் சினிமாப் படங்கள் அபிவிருத்தி யடையுமா, அல்லது, இப்படியே இருந்து விடுமா என்ற சந்தேகங்கூட ஏற்படுகிறது. நான் இதுவரையில் கவனித்ததில், தமிழ் சினிமாப் படங்கள் அபிவிருத்தி என்பது அருமருந்துதான்! தமிழ் படங்கள் அபிவிருத்தி யடையக்கூடாதென்று சினிமா கம்பெனியார் விரதங் கொண்டிருக்கிறார்கள் போலும்! பிரமாதமாக விளம்பரப்படுத்தப்படும் சினிமாப் படங்கள்கூடப் பழைய குருடி நிலைமையில்தானிருக்கின்றன! உதாரணமாக சகுந்தலை என்னும் தமிழ் சினிமாப் படத்தை எடுத்துக்கொள்ளுவோம். இதைத் தயாரித்தவர் மதுரை ராயல் டாக்கீஸார்; இதில் சகுந்தலையாக நடிப்பவர் கோகிலகான இசைவாணி எம். எஸ். சுப்புலக்ஷ்மி. சுப்புலக்ஷ்மிக்காக இந்தப் படம் தயாரித்திருக்கிறார்களே யொழிய, சினிமாக் கலையின் உயர்வுக்காகவோ, அல்லது, காளிதாசனின் கவித் திறமையைக் காட்டுவதற்காகவோ இந்தப்படம் தயாரித்திருக்கிறார்களென்று சொல்லமுடியாது! எம். எஸ். சுப்பு லக்ஷ்மி நன்றாகப் பாடக்கூடியவர்; குயில் போன்ற குரல்; அதில் சந்தேகமே இல்லை. ஆனால் சகுந்தலையாக நடிக்க சுப்பு லக்ஷ்மிக்குத் திறமையுண்டா என்பது சந்தேகந்தான். அவர் முகத் தோற்றத்துக்கும், கவி காளிதாசரின் சகுந்தலை வர்ணனைக்கும் நெடுந்தூரம்.

கவி காளிதாசன் கவித் திறமை சொல்லுந்தரமன்று. இங்கிலாந்துக்கு ஒரு "ஷேக்ஸ்பியர்" கிடைத்ததுபோல், இந்தியாவுக்கு ஒரு காளிதாசன் கிடைத்திருக்கிறார். ஆனால், ஷேக்ஸ்பியர் எழுதிய "ஷைலக்" நாடகத்தைத் தமிழில் படம் பிடித்துக் கொலை செய்திருப்பதுபோல், கவி காளிதாசன் எழுதிய சகுந்தலையையும் கொலை செய்திருக்கிறார்கள். "ஷைலக்" கொலையைப்போல், அவ்வளவு கொடிய கொலை இல்லையென்றாலும், சகுந்தலையைக் கொலை செய்திருக்கிறார்களென்பதை மறுக்க முடியாது. சகுந்தலைப் படத்தைக் கவி காளிதாசன் இன்று கண்கொண்டு பார்ப்பாரேயாயின், அவர் கதறித் துடிப்பாரென்பதில் சந்தேகமில்லை. அவருடைய இலக்கியத்தையும், கவித் திறமையையும், கற்பனா சக்தியையும் கொலை செய்திருப்பதைக் கண்டு அவர் உள்ளம் உடைந்தே இருக்கும். உண்மைக் காதல், சோகம் நிறைந்த சகுந்தலையில், அந்த இரண்டும் மருந்துக்குக் கூட இல்லை.

கதையின் ஆரம்பமே மோசம். துஷ்யந்தன் வேட்டைக்குச் செல்லுகிறான். அவனுடன் செல்லும் கூட்டம் வேட்டைக்காரர் போலில்லை; வெறி நாயைத் துரத்திச் செல்லும் தடியடிக்காரர் கூட்டம் போலிருக்கிறது! வனாந்திரத்தில் அல்ல; பொசுங்கிப் போன பொட்டல் காட்டில் வேட்டை ஆரம்பமாகிறது! அருகிலுள்ள கண்வர் ஆசிரமம் பண்டைக்கால ஆசிரமம்போல் இல்லை; ஆசிரமத்துக்குரிய ஒழுங்கு, அமைதி, சாந்தம், அணுவளவுமில்லை. கட்டறுத்துத் திரியும் மாக்களைப்போல், ஆசிரம வாசிகள் அடக்கம், அமைதியின்றி அலைகின்றனர். அவர்கள் கூட்டம் சத்திரம் சாவடிகளில் கூடும் தமாஷ் கூட்டம் போலிருக்கிறது. கூட்டம் கூட்டமாகக் கூடி, வரட்டுத் தவளைகள் கத்துவதுபோல் இறைச்சல் போடுவதாலோ, அல்லது, சுற்றி இருந்து கொண்டு ஓமம் வளர்ப்பதாலோ ஆசிரமத்துக்குரிய லட்சணம் வந்து விடாது. ஆசிரமப் பெண்கள், விசேஷமாகச் சகுந்தலை, அடங்காப் பிடாரிபோல் திரியும் காட்சி, பெரிய கண்றாவி! ஒரு மக ரிஷியால் வளர்க்கப்பட்ட பெண்ணிடம் சாந்தமில்லை; அமைதி இல்லை; ஒய்யார நடையும் தளுக்குந்தான் பிரதி பலிக்கிறது! சகுந்தலையிடமோ, சகுந்தலைமீது காதல் கொள்ளும் துஷ்யந்தனிடமோ, பெருந்தன்மையான போக்கோ, பேச்சோ இல்லை. அவர்கள் பேச்சு சாதாரண நாடோடிகள் பேசும் அவலட்சண பாஷையில் தானிருக்கிறது.

சகுந்தலையில் பாட்டுக்கள் ஏராளம்; அவ்வளவு பாட்டுக்கள் அவசியமல்ல; ஆனால், எம. எஸ். சுப்புலக்ஷ்மி பாட்டுக்காகவும், பல பெண்களைக் காட்டிக் காசுபறிக்கும் நோக்கமாகவும் இப்படம் தயாரிக்கப்பட்டிருக்கும்போது, சுப்பு லட்சுமியின் பாட்டுக்களை எப்படிக் குறைக்க முடியும்? குறைக்கத்தான் அந்தச் சினிமா முதலாளிக்கு மனம்வருமா?

ஆசிரம வாசிகளில் ஒரு பரமதடியர் இருக்கிறார்; அவருக்கு ஆசிரமத்தில் என்ன வேலையோ தெரியவில்லை; அவரை யார் எதற்காகத் தேடிப் பிடித்தார்கள்? ஹாஸ்யத்துக்கா, அல்லது, திருஷ்டிப் பரிகாரத்துக்கா? ஆசிரமப் பெண்கள் ஆடைகளுக்கும், சகுந்தலை ஆடைக்கும் வித்தியாசம் எதற்காக? இதர ஆசிரமப் பெண்களைப் போலவே சகுந்தலையும் சாதாரண ஆடை அணிந்திருக்கலாம். சகுந்தலையைப் பிரித்துக்காட்டும் நோக்கத்துடன் வேறுவிதமான ஆடை அணியும்படி செய்திருந்தால், பொருத்தமான ஆடை அணிந்திருக்கவேண்டும். தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் கங்காணிப் பெண்கள் அணியும் ஆடை சகுந்தலைக்குப் பொருத்தமாக இல்லை. சகுந்தலையாக நடிக்கும் சுப்புலக்ஷ்மியின் நடிப்பிலும், சகுந்தலையின் தோழியாக நடித்த பிரியம்வதை நடிப்பு பாதகமில்லை; அவள் குறத்தியாக நடித்தது இயற்கையாக இருந்தது. இதர பெண்கள் கைப் பாவைகள் தான்!

துஷ்யந்தன் கதா நாயகன்; ஆகவே, துஷ்யந்தன் நடிப்பு ரொம்ப நன்றாக இருந்திருக்கவேண்டும். ஆனால், துஷ்யந்தனாக நடித்த ஜி. என். பாலசுப்ரமண்யம் நடிப்பு பாராட்டக்கூடியதல்ல; அவரிடம் இயற்கை நடிப்பே இல்லை. வேஷத்தில்கூட அவரிடம் ராஜ லட்சணத்தைக் காணோம்! வேட்டைக்குப் போய்விட்டுத் திரும்பிய துஷ்யந்தன் முகாமில், எதற்காக நடனம்? வேட்டைக்குப் பெண்களையும் அழைத்துக்கொண்டு போயிருந்தார்களா? அவர்கள் நன்றாகக் குடித்துவிட்டு, வெறி மயக்கத்தில் தில்லாலே பாடிக்கொண்டு கூத்தாடியது ஏன்? அங்கு துஷ்யந்தனுக்கு என்ன வேலை? கதைக்கும் இந்த கூத்துக்கும் என்ன சம்பந்தம்? துஷ்யந்தனைவிட, சகுந்தலையை வண்டியில் ஏற்றிக்கொண்டு சென்ற வண்டிக்காரன் நன்றாகப் பாடினான்; அவனுடைய பேச்சும், நடிப்பும் துஷ்யந்தனைவிட நன்றாக இருந்தது.

கவி காளிதாசன் கற்பனையை அப்படியே படம் பிடிக்க ராயல் டாக்கிஸார் ரொம்பச் சிரமம் எடுத்திருக்கிறார்கள். ஆனால், அதில் வெற்றி பெறவில்லை. படத்தில் நடிக்கும் நடிகர்களைவிட, அதே படத்தில் தோன்றிய, மான், மயில், செடி, கொடி, குளம், குட்டைகள் ரொம்ப இயற்கையாக இருந்தன!

சகுந்தலையிலுள்ள மற்றொரு பெரிய ஆபாசம் செம்படவர் வேடிக்கை! இது அளவு மீறிய, வெறுக்கத்தக்க ஹாஸ்யம்; இயற்கைக்கு மாறானது. சகுந்தலை ஹஸ்தினாபுரத்துக்கு போகும் வழியில், ஒரு குளத்தில் ஸ்நானம் செய்யும்போது மோதிரத்தை இழந்தாள். அந்த மோதிரத்தை விழுங்கிய மீன் திருவல்லிக்கேணி கடற்கரைக்கு எப்படிவந்தது? அந்தக் கடற்கரைக் காட்சி அவசியமா? இது காளிதாசனின் கற்பனைச் சிறப்பா, அல்லது, டைரக்டர்களின் கற்பனா சக்தியின் வேகமா? இதுபோன்ற இன்னும் பல குறைகளிருக்கின்றன. படம் பிடிப்பு மோசமில்லை; ஆனால், ஒலிப்பதிவு மோசம். சிற்சில சமயங்களில் பேச்சு விளங்குவதே இல்லை. இவ்வளவு குறைகளிருந்தும், சகுந்தலை படம் தமிழ் படங்களில் தலை சிறந்தது என்று விளம்பரஞ் செய்வது மக்களை ஏமாற்றுவதற்கேயாகும். எம் எஸ். சுப்புலக்ஷ்மி, சுந்தராம்பாள் போன்ற நல்ல பாடகர்களைக்கொண்டு, படம் பிடித்துப், பணம் பறிப்பதில் சினிமா முதலாளிகள் கண்ணுங் கருத்துமாக இருக்கிறார்களே யொழிய, தமிழ் படங்களைச் சிறப்பாகவும், இயற்கையாகவும் தயாரிக்க வேண்டுமே யென்ற எண்ணம் அறவே இல்லை. சினிமாவுக்கு நல்ல பாடகர்கள் அவசியந்தான்; ஆனால், அதேபோன்ற, சினிமாப் படங்களையும், நல்லவிதமாகத் தயாரிக்கவேண்டியது அவசியம். நல்ல பாடல்களைக் கேட்க மக்கள் கூடலாம். ஆனால், படத்தைக் கண்டதும் வெறுப்புற்றுத் திரும்பிவிடுவார்கள்; அப்புறம் கூட்டங்களும் வர வரக் குறைந்து போகுமென்பதை முதலாளிகள் மறந்துவிடக்கூடாது. கடைசியில் போட்ட முதலுக்கும் ஆபத்துவந்து விடக்கூடும்!

திருத்தணி வைபவம்

எம். எஸ். எம். ரெயில்வே ஏற்பாடு

சென்ற சில வருஷங்களாகவே ஜனவரி முதல் தேதியன்று, சென்னையிலிருந்தும், இதர இடங்களிலிருந்தும் ஏராளமாக ஜனங்கள் திருத்தணி க்ஷேத்திரத்திற்கு வந்து மலைமீதுள்ள திருத்தணி கேசன் முருகக் கடவுளை வணங்கிச் செல்லுவது வழக்கம். அதேபோல், 1941-ம் வருடம் ஜனவரி மாதம் முதல் தேதி, சென்னை முதலிய வெளியிடங்களிலிருந்து ஆயிரக்கணக்கான ஜனங்கள் இங்கு ஸ்வாமி தரிசனத்துக்கு வருவார்கள். திருப்புகழ் கீர்த்தி வாய்ந்த ஸ்ரீல ஸ்ரீ. சச்சிதானந்த ஸ்வாமிகள், 12 வருஷ தவசை முடித்துக் கொண்டு, இவ் வருஷப் பிறப்பன்று திருத்தணிக்கு விஜயம் செய்கிறார்.

திருத்தணி கேசன் முருகக் கடவுளையும், திருப்புகழ் கீர்த்தி பெற்ற ஸ்ரீல ஸ்ரீ. சச்சிதானந்த ஸ்வாமிகளையும், தரிசிக்க திருத்தணிக்கு விஜயம் செய்யும் பிரயாணிகளுக்கு, எம். எஸ் எம். ரெயில்வே கம்பெனியார் விசேஷ வசதிகள் செய்து கொடுக்க முன் வந்திருக்கின்றனர்.

சென்னை, திருத்தணி ரிட்டர்ன் டிக்கட்டுகள், பெரியவர்களுக்கு ரூ. 1-6-0 வீதமும், 3 வயதுக்கு மேல் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு ரூ. 0-11-6 வீதமும் கொடுக்க ஏற்பாடாகியிருக்கிறது. இந்த டிக்கட்டுகள் டிசம்பர் 30, 31 தேதிகளிலும், ஜனவரி 1ம் தேதியும் மதராஸ் சென்டிரல், பேஸின் பிரிட்ஜ், வண்ணாரப்பேட்டை, மதராஸ் பீச், ராயபுரம் ஸ்டேஷன்களிலிருந்தும் சென்னையிலுள்ள டவுன் புக்கிங் ஆபீஸ்களிலிருந்தும் கொடுக்கப்படும். இந்த டிக்கட்டுகள் ஜனவரி மாதம் 2ந் தேதி வியாழக்கிழமை நடு இரவுக்குள் திரும்பும் பிரயாணத்தை முடித்துக் கொள்ள செல்லுபடியாகும். இது சம்பந்தமான துண்டுப் பிரசுரங்கள் எம். எஸ். எம். கம்பெனியாரால் வெளியிடப்பட்டிருக்கிறது.

டம்-டம் குண்டு

மலைவிழுங்கிய மகா தேவன்!
ரகமான வசை புராணம்!
வேலிக்கு ஓணான் சாட்சி!
ஆயிரம் அவதாரம்!
சூட்சமம் தெரிந்ததா?
மண்டையில் களி மண்ணு?

(எம்டன்)

மலை விழுங்கிய மகா தேவன் கதை கேள்விப்பட்டிருக்கலாம்; அந்த மகா தேவனையும் தோற்கடித்துவிடுவார், சு. ம. "மகாதேவன்" நாயக்கரும், அவர் தோழர்களும்! மலையை விழுங்கிவிடுவதாக ஜம்பம் பேசுவார்கள்; வெறும் பேச்சோடு சரி! இந்தியாவையே ஆட்டி வைத்துவிடப் போவதாகக் கூத்தாடுவார்கள்; அவர்கள் கூத்து ஒரு தெருக் கூத்துப்போல் முற்றுப் பெறும். காங்கிரஸைத் திட்டுவதோடு நின்றுவிடுவார்கள்; அதற்கு மேல் ஒரு அடி கூட எடுத்துவைக்க மாட்டார்கள். திட்டுவதையும் மரியாதையாகவாவது திட்டித் தொலைப்பார்களா? அதுவுமில்லை. அதற்கென ஒரு ரகமான வசை புராணத்தை மனப்பாடம் செய்திருக்கிறார்கள் அந்த ரகம் யாருக்கும் வராது; அவ்வளவுக்கு அவை ஆபாசமாம்! சு. ம. காரருக்கு ஏற்ற வார்த்தைகள்; வார்த்தைகளுக்கு ஏற்ற சு. ம காரர்! சு. ம. காரர் கூட்டங்களுக்குச் சென்றால், நீங்களே அந்த வசை புராணத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். அப்புறம் அந்தக் கூட்டங்களையோ, கூட்டங்களில் செய்யும் பிரசாரங்களையோ காதால் கூடக் கேட்கத் துணியமாட்டீர்கள்! உங்களுக்கு ஆவேசம் பொங்கும்; இரத்தம் கொதிக்கும்; சு. ம காரரை நசுக்கிவிடலாமா என்று கூடச் சிந்திப்பீர்கள். தமிழ் நாட்டுக்குச் சு. ம. குலாமே ஒரு பீடையென்ற எண்ணத்துடன் திரும்புவீர்கள்; அவ்வளவுதான்.

ஃ ஃ ஃ

சு. ம. காரர் பேச்சிலாவது ஏதேனும் உண்மை இருக்குமா? கிடையாது. உண்மையோ, நேர்மையோ கடுகளவும் கிடையாது! அவர்கள் வாதமோ வரட்டுவாதம்; சாதாரண அறிவுள்ளவர்களுக்குக்கூடப் புரியாத வக்கிரவாதம்! நீதிக்கும், நியாயத்துக்கும் நேர் மாறான வாதம்! அந்த வாதத்தில் அவர்களே கை தேர்ந்தவர்கள். அசல் பைத்தியகாரர் கூட அவ்வித தோரணையில் வாதஞ் செய்யமாட்டார். பைத்தியகாரர் வாதத்தையும் தோற்கடித்து விடும் சு. ம.காரர் வாதம்! அவர்கள் வாதத்துக்கு யாரை சாட்சிக்கு இழுப்பார்கள் தெரியுமா? வேலிக்கு ஓணான் சாட்சி என்பதுபோல், காங்கிரஸிலிருந்து, காங்கிரஸ் உதவியால், பேரும், புகழும் பெற்று, ஆசை தலைக்கேறி, அடங்காப் பிடாரிகளாகக் காங்கிரசிலிருந்து வெளியேறிய மாஜி மந்திரிகள் கூற்றுக்களைத்தான் அவர்கள் ஆதாரமாக எடுத்துக் காட்டுவதுண்டு. காங்கிரஸிலிருந்து, வெளியேறிய அடங்காப் பிடாரிகளின் வார்த்தைகளுக்குச் சாதாரணமக்கள் மதிப்புக்கொடுப்பதில்லை. சு. ம. காரரோ அவர்கள் வார்த்தைகளுக்கு ரொம்ப மரியாதை கொடுக்கிறார்கள்; ஏன்? அவர்கள் காங்கிரஸ் மீதும், காந்திஜிமீதும் வசைமாரி பொழிகிறார்களல்லவா? அந்த வசைமாரிகளை, சு. ம. காரர் அப்படியே அவர்களுடைய வரட்டுவாதங்களுக்குப் பயன் படுத்திக்கொள்ள மதிப்புக் கொடுக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

சமீபத்தில் காங்கிரஸைப்பற்றி, எம். என். ராய் பெரிய அளப்பு அளந்தார்! ராய், யார் என்பது தெரிந்திருக்கலாம். பெரிய போல்ஷவிக் வாதி; பொதுவுடமைத் தீரர்; சமதர்ம வீரர் என்றெல்லாம் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஏகாதிபத்திய எதிர்ப்பில் முன்னணியில் நின்றவர்; அவர் வெளிநாடுகளில் சுற்றித் திரிந்தபின் இந்தியாவுக்கு வந்தார்; காங்கிரசையும், காங்கிரஸ் கோரிக்கைகளையும் பாராட்டினர்; காங்கிரஸில் சேர்ந்தார்; காங்கிரஸ் வழியாக உயர்ந்த பதவி பெறலாமென்று எதிர்பார்த்தார்; ஏமாற்றமடைந்தார்! அந்தப் பதவிகள் கிட்டவில்லை. கிட்டாதாயின் வெட்டனமற என்றபடி, ராய் காங்கிரசிலிருந்து மரியாதையாக வெளியேறி இருக்கவேண்டும். அந்த மரியாதையைக்கூட ராய் அறியவில்லை; காங்கிரசிலிருந்துகொண்டே, காங்கிரசையும், காங்கிரஸ் தலைவர்களையும் எதிர்க்கப் புறப்பட்டார். காங்கிரஸ் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் குற்றஞ் சொல்ல முன்வந்தார். காந்திஜியின் கொள்கையே அவருக்குப் பிடிக்கவில்லை; காந்திஜியின் அஹிம்சைக் கொள்கையைக் கிண்டல் செய்யலானார். அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை யெடுத்துக் கொண்டனர். ராய்க்குப் புத்தி வந்தது. மெதுவாகக் காங்கிரசிலிருந்து விலகி, இன்று காங்கிரசுக்கு எதிராக வேலைசெய்யும் ஒரு பெரிய புண்ணிய கைங்கர்யத்தில் இறங்கியிருக்கிறார்! இன்று காங்கிரசைத் தூற்றுவது தான் அவருடைய ஒரே கடமை! அவருடன் தூற்றல் திரும்புகளும் சில சேர்ந்துகொண்டன. இவர்கள் எல்லோரும் காங்கிரஸிலிருந்து சிட்டுக் கொடுக்கப்பட்டவர்கள்! இவர்களில் ஒருவர் பேர்போன டாக்டர் கரே; டாக்டர் கரே யாரென்பதைத் தெரிந்திருக்கலாம். காங்கிரஸ் பெயரால் மத்திய மாகாணத்துக்கு முதன் மந்திரியாக வந்தவர்; அந்தப் பதவியிலிருந்துகொண்டு உற்றார் உறவினருக்குச் சலுகை செய்யப் புறப்பட்டார். அதனால் அவரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டியதாயிற்று. பதவி போனபின் காங்கிரசில் என்ன வேலை என்று எண்ணி, காங்கிரஸிலிருந்து ஒதுங்கிக் கொண்டார். அவரும் சிறிது காலமாக, இன்று ராய் என்ன தர்ம காரியஞ்செய்து வருகிறாரோ அதே தர்ம காரியத்தில் தீவிரமாக இருந்தார்! காங்கிரஸை அவர் தூற்றாத நாள் கிடையாது; தூற்றித் தூற்றி, அலுத்துப் போய்விட்டார்! ஆனால், இடையிடையே அவர் ஓலமும் கேட்டுக் கொண்டுதானிருக்கும்!

ஃ ஃ ஃ

கோர் ஓலத்தையும் தூக்கி எறிந்து விடும், ராய் ஓலம்! வெறும் ஓலத்துடன் ராய் நின்றுவிடவில்லை; காங்கிரஸுக்கு விரோதமாக மற்றொரு அகில இந்திய கட்சியொன்றை அமைக்க வேலைசெய்து வருகிறார். கல்கத்தாவில் ஒரு அகில இந்திய கட்சியொன்றைக் கூட்டப் பகீரதப் பிரயத்தனஞ் செய்து வருகிறார். அவர் முயற்சி வெற்றி பெறுமா, பெறாதா என்ற சந்தேகமே வேண்டாம்; அது ஒரு நாளும் வெற்றி பெறாது. ஒரு ராய் அல்ல; ஆயிரம் ராய்கள், ஆயிரமாயிரம் அவதாரம் எடுத்து வந்தாலுஞ்சரி; காங்கிரசுக்குப் போட்டியாக ஒரு அகில இந்தியக் கட்சியை ஏற்படுத்த முடியவே முடியாது. இதை சு. ம. ஜஸ்டிஸ்காரரே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கட்சியைப் பற்றிக் கூறுபவர்கள் எவரும் அதை ஆதரிக்கவில்லை; அது உருப்படாதென்றே அபசகுனமாகப் பேசுகிறார்கள்!

ஃ ஃ ஃ

உருவாகு முன்னரே, உருக்குலைக்கும் வார்த்தைகள் வரும்போது, எவ்வாறு உருப்படும்? அது மட்டுமா? காங்கிரஸ்காரர் ராஜிநாமா செய்த மாகாணங்களிலெல்லாம் கூட்டு மந்திரி சபை அமைக்க ராய் வேலைசெய்து வந்தார். மத்திய மாகாணம், ஐக்ய மாகாணம், பம்பாய், பீகார் முதலிய மாகாணங்களில் காங்கிரஸ் எதிரிகளைத் திரட்டிக் கொண்டு கூட்டு மந்திரி சபை அமைக்கமுயற்சித்தார். அதற்காகக் கவர்னர்களைத் தரிசித்தார்; யோசனை சொன்னார். கூட்டு மந்திரி சபை அமைக்க முடியவில்லை. ஆகவே, அந்த யோசனையைமூட்டை கட்டி மூலையில் போட்டு விட்டு, இன்று அகில இந்திய கட்சியை ஏற்படுத்த வேலை செய்து வருகிறார். அந்தக் கட்சியை அவரே கட்டியழட்டும்; அதைப்பற்றி யாருக்கும் அக்கரை இல்லை. காங்கிரஸ் மீதுள்ள வயிற்றெரிச்சல் தீருமட்டும், அவர் திட்டிக் கொண்டுதானிருப்பார்; அதை யாராலும் தடுக்க முடியாது. வாய் ஓய்ந்தபின், கரேயைப்போல், ராயும் வாயை மூடிக் கொண்டு, மூலையில் குந்தி விடுவார்! அதில் சந்தேகமே இல்லை.

ஃ ஃ ஃ

ஆனால், ராய் போடும் யோசனை தான் பெரிய யோசனை! காங்கிரஸை மீண்டும் பதவிக்குவர அனுமதிப்பது பேராபத்தாகுமாம்! காங்கிரஸை நம்பவே கூடாது; இந்தியர் சார்பாகப் பேசும் பூர்ண உரிமை காங்கிரஸுக்கே இருப்பதாகக் கூறுகிறார்கள்; அந்த உரிமை இருப்பதாகக் கூறுவதை உடைத்தெறிய வேண்டுமென்று ராய் சொல்லுகிறார்! இதையே சு. ம. காரர் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டு ஆடுகிறார்கள்! ஏன்? ராய் அப்படிச் சொல்லுகிறாராம்! காங்கிரஸ்காரர் ஆரம்பித்திருக்கும் சட்ட மறுப்புப் போராட்டம் எதற்கு? அவர்கள் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவதற்கேயென்று மாஜி டாக்டர். கரே சொல்லுகிறார்! அதையும் கிளிப்பிள்ளை மாதிரி, சு. ம. காரர் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள்! இதிலிருந்து என்ன தெரிகிறது? சு. ம. காரருக்குச் சுயபுத்திகிடையாது; பிறர் சொல்லுவதைக் கேட்டு அதைக் காட்டிக் காங்கிரஸைத் தூற்றுவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்களென்பது தெரியவில்லையா?

ஃ ஃ ஃ

காங்கிரஸ் இன்று ஆரம்பித்திருக்கும் போராட்டம் பித்தலாட்டமானது; அது ஒரு சூழ்ச்சிநாடகம், நயவஞ்சகப் பிரசாரம்; இதற்கு மக்கள் இடங்கொடுக்கக்கூடாது என்றெல்லாம் சு. ம. ராமசாமி நாயக்கர் சொல்லுகிறார். யுத்தம் சம்பந்தமாகக் காங்கிரஸ்காரர் சொல்லும் வாதமும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்லவாம்! பிரிட்டிஷார் இந்தப் போராட்டத்தை எதற்காக

(அடுத்த பக்கம் பார்க்க)

டம்-டம் குண்டு

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்திருக்கிறார்கள்? அவர்கள் போர் நோக்கம் என்ன? இந்தப் போராட்டத்தில் இந்தியா நிலை என்ன? போரில் இந்தியாவை இழுத்துவிடுமுன், அவர்கள் இந்தியாவைக் கலந்து கொண்டார்களா? இதுவே காங்கிரஸ்காரர் கேள்வி இதற்குப் பிரிட்டிஷார் என்ன சொல்லுகிறார்கள்? அவர்கள் யுத்த நோக்கமென்ன? நாஜியர் எதிர்ப்பு; சாம்ராஜ்ய பாதுகாப்பு; தற்காப்பு முதலிய காரணங்களைப் பிரிட்டிஷார் கூறுகிறார்கள். ஐரோப்பிய சிறு நாடுகளின் சுதந்திரத்துக்காகவும் பிரிட்டிஷார் இந்தப் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்களென்ற உண்மை சு. ம. காரருக்குத் தெரியாது போலும்! இதைப் பிரிட்டிஷாரே பலமுறை கூறியும் சு. ம. காரர் மூளைக்கு அது எட்டவில்லை.

ஃ ஃ ஃ

சு. ம. காரரின் விதண்டாவாதத்தைக் கவனிப்போம். இந்தியாவின் சம்மதமில்லாமல், இந்தப் போராட்டத்தில் இந்தியாவை இழுத்துவிட்டது கூடாது என்று காங்கிரஸ்காரர் சொல்லுகிறார்கள்; அது நீதியா என்று கேட்கிறார்கள். நீதிதானா? இல்லை; இந்தியா ஒரு குடியேற்ற நாடு அல்ல; ஆகவே இந்தியாவின் அபிப்ராயத்தைக் கேட்க வேண்டிய அவசியமில்லை; சட்டப்படி பிரிட்டிஷார் நடந்து கொண்டார்கள்; ஆகவே, அது குற்றமாகாது என்று சு. ம. ராசாமி நாயக்கர் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு, வாதிக்கிறார். இந்தியா ஒரு குடியேற்ற நாடு அல்ல; ஆனால், குடியேற்ற நாட்டுக்குரிய அந்தஸ்து இந்தியாவுக்கு இருக்கிறதென்று பிரிட்டிஷார் வெளிநாடுகளில் பிரசாரஞ்செய்கிறார்களே, அது இந்தியரை ஏமாற்றவா, அல்லது, வெளிநாட்டினரை ஏமாற்றவா? அதுவும் போகட்டும்; இந்திய சட்ட சபையைப் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு ஒப்பிட்டுப் பிரிட்டிஷார் பெருமையடித்துக் கொள்ளுவதையாவது சு. ம. நாயக்கர் கேள்விப்பட்டிருப்பாரா?

ஃ ஃ ஃ

இந்தியாவைப் பிரிட்டிஷார் கலந்துகொள்ளாது போயினும், இந்திய சட்ட சபையையாவது அவர்கள் கலந்துகொண்டார்களா? அதுவும் கிடையாது. அப்படியானால், இந்திய சட்டசபையை, இந்தியப் பார்லிமெண்டு, இந்திய ஜனப் பிரதிநிதி சபையென்று சொல்லுவதின் அர்த்தமென்ன? அது வெறும் "ஹம்பக்" பார்லிமெண்ட், என்றுதான் அர்த்தம்! இதைக் காங்கிரஸ்காரர் கேட்பது குற்றமா? போர் நோக்கமென்ன? ஜனநாயகத்துக்காகவே பிரிட்டிஷார் இந்தப் போராட்டத்தில் இறங்கி இருப்பதாகக் கூறுகிறார்கள். அப்படியானால், இந்தியாவுக்கு ஜன நாயக சுதந்திரம் கேட்பது குற்றமா? நாஜியரை எதிர்ப்பதில், இந்தியர் பிரிட்டிஷாருக்கு இளைத்தவர்களல்ல; பிரிட்டனையும், இந்தியாவையும் பாதுகாக்க வேண்டுமென்ற ஆர்வத்தில் பிரிட்டிஷாருக்கு இந்தியர் எந்தவிதத்திலும் சப்பட்டையல்ல. அவ்வாறு இருந்தும், இந்தியாவுக்கு ஜனநாயக ஆட்சி கொடுக்கப் பிரிட்டிஷார் ஏன் மறுக்கிறார்கள்? ஜனநாயக ஆட்சி கொடுப்பதாக வாக்குறுதி கொடுக்கக்கூடப் பிரிட்டிஷார் ஏன் தயங்குகிறார்கள்? இது பிரிட்டிஷாரின் நேர்மையைக் காட்டுகிறதா? பிரிட்டிஷாருக்காக வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசும் சு. ம. நாயக்கர் இதற்குப் பதில் சொல்லுவாராக!

ஜனநாயக ஆட்சியுடைய அமெரிக்காகூட, அதன் ஜனநாயக சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் பிரிட்டனுக்கு உதவிச் செய்கிறது. தற்காப்பு என்பதே இல்லாத இந்தியா யுத்தத்துக்கு உதவிச் செய்ய மறுப்பது நியாயமா என்று சு. ம "பெரியார்" கேட்கிறார். அமெரிக்கா, பிரிட்டனுக்கு உதவிச்செய்யக் கடமைப் பட்டிருக்கிறது. ஏன்? அமெரிக்காவின் சுயநலமே அதற்குக் காரணம். அமெரிக்காவின் யுத்த தளவாடங்கள் விலையாகவேண்டும்! அமெரிக்கா செழிக்க வேண்டும்; தொழிலாளருக்கு நிறைய வேலை வேண்டும். அதற்காக அமெரிக்கா, பிரிட்டனுக்கு உதவிச் செய்கிறது. பிரிட்டன் இந்த யுத்தத்தில் தோற்றால், அமெரிக்காவுக்கு ஆபத்து என்பது அதற்குத் தெரியும். அதை உத்தேசித்தே அமெரிக்கா பிரிட்டனுக்கு உதவிச் செய்கிறது இந்தியா உதவிச் செய்ய மறுக்கவில்லை; உதவிச் செய்யத் தயாராக இருந்தும், பிரிட்டிஷார் அந்த உதவியை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர். இந்தியர் கோரிக்கைக்கு இணங்கி வர மறுத்து வருகிறார்கள். ஜனநாயகக் கொள்கையுடைய பிரிட்டிஷார், ஜனநாயகத்துக்காகவே யுத்தத்தில் இறங்கி இருப்பதாகச் சொல்லும் பிரிட்டிஷார், இந்தியாவின் கோரிக்கையை ஏன் ஏற்றுக் கொள்ள மறுத்து வருகின்றனர்? சு.ம. நாயக்கருக்கு அந்தச் சூட்சமம் தெரியுமா? தெரிந்திருந்தால், அவருடைய ஞான சூன்யத்தில் இவ்வாறு பேசி இருக்கவே மாட்டார்! பாம்பு அறியும் பாம்பின் கால் என்பது போல், அந்தச் சூட்சமத்தைப் பிரிட்டிஷார் அறிவார்கள்! அறிவை அடமானம் வைத்திருக்கும் சு. ம. காரரால் அதை அறிந்து கொள்ளவே முடியாது!

பிரிட்டன்மீது குறை சொல்லும் காங்கிரஸ்காரர் ஏன் ஒரு சாத்வீகப் போராட்டத்தை நடத்துகிறார்கள்? அந்தப் போராட்டத்தை நடத்துமுன், லீகரையோ, சு. ம. காரரையோ காங்கிரஸ்காரர் கேட்டார்களா? சு. ம. காரரும், லீகரும் காங்கிரஸ் போராட்டத்தில் கலந்து கொண்டால், அவர்கள் நிலை என்ன என்று சு. ம. நாயக்கர், விரிந்த பகுத்தறிவுடன் கேட்கிறார்! ரொம்ப சந்தோஷம்! நாயக்கரின் பரந்த பகுத்தறிவுக்காகச் சபாஷ் பட்டம் கொடுக்கிறேன்! காங்கிரஸ்காரர் சாத்வீகப் போராட்டத்தை நடத்த போவதாக இன்று நேற்றல்ல, ஒரு வருடமாகச் சொல்லிக் கொண்டுதானிருக்கிறார்கள். லீகரும் அதை அறிவார்கள்; எங்கேயோ ஒரு மூலையிலுள்ள சு. ம. காரர்கூட அதை அறிவார்கள்! அவர்களைக் கலந்து யோசிக்க வேண்டிய அவசியமே இல்லை. காங்கிரஸ்காரர் சுயநலத்துக்காக இந்தப் போராட்டத்தை நடத்தவில்லை. இந்தியாவின் சுய மதிப்பை, சுதந்திரத்தைப் பாதுகாக்கவே இந்தப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். சுயமதிப்புள்ள, சுயமரியாதையுள்ள, மான ரோஷமுள்ள ஒவ்வொரு இந்தியரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள்; போராட்டத்தில் கலந்து கொள்ளாது போயினும், அதை ஆதரிக்கவாவது கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில், எங்களைக் கேட்டார்களா என்று, முட்டாள்த்தனமாக நாயக்கர் கேட்பதைக் கண்டு சிரிக்காமலிருக்க முடியவில்லை!

ஃ ஃ ஃ

அது போகட்டும்; இந்திய போராட்டத்தில், லீகரும், சு. ம. காரரும் கலந்து கொண்டால், அவர்கள் நிலை என்னவென்று சு. ம. நாயக்கர் கேட்கிறார். அவர்கள் நிலையா? இந்தியர் நிலைதான்! சுதந்திர இந்தியா நிலை. காங்கிரஸ்காரர் போராட்டம் ஆரம்பித்திருப்பது எதற்கு? சுதந்திரத்துக்காக, அந்தச் சுதந்திரம் காங்கிரஸ்காரருக்கு மட்டும் சொந்தமாகுமா? காங்கிரஸ் காரருக்கு மாத்திரம் சொந்தமல்ல; அது அவர்களுக்குத் தனிச் சொத்தும் அல்ல; இந்திய சுதந்திரம் எல்லோருக்கும் சொந்தம்; சு. ம. ஜஸ்டிஸ்காரர், லீகர், எல்லோருக்கும் இது தெரியும். இதில் கேள்வி என்ன வந்தது? இந்தக் கேள்வி கேட்கும் சு. ம நாயக்கருக்கு மண்டையில் மூளை இருக்கிறதா, அல்லது, களி மண்தான் இருக்கிறதா? மற்றச் சந்தேகங்களை நிவர்த்திக்காது போயினும், சு. ம. நாயக்கர் அவர் மூளை சம்பந்தப் பட்ட என்னுடைய சந்தேகத்தை நிவர்த்திப்பாரென்று நினைக்கிறேன். எனக்கு ஏற்பட்ட சந்தேகம் தமிழர் எல்லோருக்கும் ஏற்படக் கூடியதுதான். சு. ம. ராமசாமி நாயக்கரின் பதிலை ஆவலோடு தமிழர் எதிர்பார்த்துக் கொண்டிருப்பாரென்பதில் சந்தேகமில்லை!

புது வருஷ பிரசன்டேஷன் கேக்



சுத்தமான பொருள்களைக் கொண்டு சுகாதார முறைப்படி, வெகு அழகான வேலைப்பாடுகளுடன்

2, 3, 5 ராத்தல் அளவுகளில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன

ரூ. 4 முதல் 12 வரை விலையுள்ள பலவித கேக்குகளும் தயார்.

கண்டிராக்டர்களுக்கும் மொத்த வியாபாரிகளுக்கும் தக்க கமிஷன் உண்டு.

ஸ்பென்சர் & கோ., லிமிடெட்.,

எலக்டிரிக் பேக்கரி, சென்னை.

-: ம ே ன ா ர த ம் :-

—: குமுறும் எரிமலே ! :—

:: எத்தனே பூச்சாண்டி ? ::

:-: மூக்குமுட்டிய ஆசை ! :-:

:: தண்டச் சோறு ! ::

—: இதாலிக்குச் சாவு மணி ! :—

துணியுமேயானல், பெல்ஜியம், ஹாலந்து, நார்வே, டென்மார்க், போலந்து முதலிய சகல நாடுகளும் கட்டாயம் ஹிட்லரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தே தீரும். ஏற்கனவே அந்நாடுகளில் புர்ட்சி புகைந்து கொண்டுதானிருக்கிறது. அந்தப் புரட்சி கொழுந்துவிட்டு எரியுமேயானல், ஹிட்லர் தோல்வி துரிதத்தில் வந்துவிடும். ஹிட்லர் இன்ற குமுறும் ஒரு எரிமலேயில் இருந்து கொண்டிருக்கிருர். அந்த எரிமலே என்று வெடிக்குமோ யாருக்கும் தெரியாது.

ஃ ஃ ஃ

பிரான்ஸ் உதவி கிடையாமற் போனலும், ஹிட்லர் சும்மா இருக்கமாட்டார். அவர் எப்படியும் ஒரு தீவிர யுத்தத்தில் இறங்கித்தான் தீருவார். இதாலிக்கு ஏராளமான ராணுவங்களே அவர் அனுப்பி வைத்திருப்பதின் ரகசியம் இதுதான். முஸோலினி தோல்வியடைந்ததால் மத்திய தரக் கடலில், ஹிட்லரே மும்முரமான யுத்தத்தை நடத்தலாம். அங்கு யுத்தம் நடந்து கொண்டிருக்கும்போதே, பிரிட்டனேத் தாக்க ஆரம்பிக்கலாம். பிரிட்டனேத் தாக்க இதுதான் சமயம்; வெறும் விமானப் படைகளேக் கொண்டு தாக்குவதால் பிரிட்டனே ஜெயித்துவிட முடியாது பிரிட்டனில் ஜெர்மன் ராணுவங்களேக் கொண்டுபோய் இறக்கியே தீரவேண்டும். இதற்காகத்தான் ஹிட்லர் பெரிய யோசனே போட்டுக் கொண்டிருக்கிருர். ராணுவங்களேக் கொண்டுபோவதாக இருந்தால், பிரிட்டிஷ் கடற்படைகளே முதலில் தோற்கடிக்க வேண்டும். அந்த விஷயத்தில்தான் முக்கியமாக ஹிட்லர் கவனஞ்செலுத்தி வருகிருர். ஜெர்மன் சப்மரையன்களும், டார்பிடோக்களும், பிரிட்டிஷ் கப்பல்களே மூழ்கடித்து வருவதின் அந்தரங்க நோக்கம் இதுதான்.

ஃ ஃ ஃ

முன்போல் விமானப்படைகளேக் கொண்டு பிரிட்டனேத் தீவிரமாகத் தாக்காமல், பிரிட்டிஷ கடற்படைகளே இப்பொழுது தாக்குவதற்கு இதுதான் காரணம். பிரிட்டிஷ் கடற்படைகளே முறியடித்து பிரிட்டனே முற்றுகைபோட ஹிட்லர் நினேக்கிருர். பிரிட்டனே முற்றுகைபோட்டபின், திடீரென ஏராளமான விமானப் படைகளேக் கொண்டு பிரிட்டனேத் தாக்கி, விமானங்கள் மூலம் ஜெர்மன் ராணுவங்களேப் பிரிட்டனுக்குள் இறக்கத் திட்டம் போட்டிருப்பதாக வதந்தி. ஜெர்மானியரிடம் சுமார் 30000 விமானங்களும், 7000 வெடி விமானங்களும் இருப்பதாகச் சொல்லுகிருர்கள். வெடி விமானங்களே அனுப்பி, பிரிட்டிஷ் விமானங்களே யுத்தத்தில் ஈடுபடும்படி செய்து பல ஆயிரக்கணக்கான விமானங்களில் ராணுவங்களேக் கொண்டுவர ஹிட்லர் நினேத்திருக்கிருராம்! அந்த விமானங்கள், ராணுவங்களே ஏற்றிக் கொண்டுவந்து, பிரிட்டனில் இறக்கிவிட்டு, மீண்டும் அதிக ராணுவங்களே ஏற்றிக் கொண்டு வரலாம். இப்படியே பலமுறை வந்துபோனல் பிரிட்டனுக்குள் ஏராளமான ஜெர்மன் ராணுவங்களேக் கொண்டுவந்து குவித்துவிடலாமென்பது ஹிட்லர் எண்ணம்! இந்த எண்ணத்துடன் அவர் ஜப்பானேத் தூண்டிவருகிருர்

ஃ ஃ ஃ

ஜப்பானே அச்சில் சேர்த்ததற்கு முக்கிய காரணம் இதுதான். ஜப்பானேக் காட்டி, ரஷியாவைப் பயமுறுத்த வேண்டுமென்பது ஒரு காரணம். அமெரிக்காவையும் பூச்சாண்டி காட்டவேண்டுமென்பது மற்ருெரு காரணம். அமெரிக்கா இந்த யுத்தத்தில் ஈடுபடக் கூடாது என்ற எண்ணம் ஹிட்லருக்குக் கிடையாது. அமெரிக்கா இந்த யுத்தத்தில் ஈடுபட வேண்டுமென்பதுதான் ஹிட்லருக்கு மூக்கு மூட்டிய ஆசை! அதற்காகவே ஹிட்லர் அமெரிக்காவைப் பகிரங்கமாக எதிர்த்துக் கோபமூட்டி வருகிருர்! அமெரிக்கா நேரடியாக யுத்தத்தில் இறங்க விரும்பவில்லே; பிரிட்டனேக் கொண்டே ஹிட்லரைத் தோற்கடிக்க அமெரிக்கா நினேக்கிறது. அதற்காக எவ்வளவு உதவிச் செய்யவும் அது சித்தமாக இருக்கிறது; உதவிச் செய்தும் வருகிறது. இதுதான் ஹிட்லருக்கு அதிக வெறியை உண்டுபண்ணிவிட்டது. அமெரிக்கா நேரடியாக யுத்தத்தில் ஈடுபட வேண்டும்; இன்றேல், அது பேசாமல் ஒதுங்கி இருக்க வேண்டும். நடுநிலேமையென்ற வேதாந்தம் பேசி,

(அடுத்த பக்கம் பார்க்க)

முந்துங்கள் ! ★ முந்துங்கள் !!

சொற்பப் பிரதிகளே கைவசம் இருக்கின்றன.

சொக்கநாதன்
அல்லது
ரங்கன் திருவிளேயாடல்

★ ★

காதல், சோகம், ஹாஸ்யம் திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த துப்பறியும் நாவல்

முதல் பாகம்
விலே அணு 12.
எல்லா "தமிழ்மணி" ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

★ ★

மானேஜர்:—
"தமிழ்மணி"
மதராஸ்.

தாது புஷ்டியில் முன் ராஜ மன்னர்கள் அபரிமிதமான இன்ட-சுகமனுபவித்த ராஜஸ்தம்டன குதூகல அவிழ்தங்கள்

மகா வீரிய மதயானே
தங்க பற்பக் குளிகை

தாது புஷ்டியில் அடக்க முடியாத பலமும், இந்திரியத்தை இறுக்கி, தாது வலுவடைந்து இன்ப சுகத்தில் மதங்கொண்ட யானேயின் பலமும் உண்டாகும். குதூகல சக்தியையும் ஆச்சரியப்படும்படி கொடுக்கும். மஹா உன்னதமான குளிகை 100-க்கு ரூ. 7-0-0; 50 குளிகை ரூ. 4-0-0 ஷை தனி தங்க பற்பமும், ராஜ கெம்பீர குதூகல லேகியமும், ராஜஸ்தம்பன ரஜசும் ஆக மூன்றும் 100 வேளேக்கு ரூ. 30-0-0; 60 வேளேக்கு ரூ. 20-0-0. ஷை தங்க பற்பம் மதயானேயின் குதூகலத்தைக் கொடுத்தாலும், ஷை லேகியம் பறவைகளின் சக்தி சற்றேனும், அயராது சுறுங்கச் சொல்வோமானல், இன்பசுக உற்சாகத்திற்கு சிட்டுக்குருவிதான் மஹா மகிமை பெற்ற அவிழ்தம். முந்தினல் கிடைக்கும்.

ராஜ வைத்தியம் **M. K** சுவாமியவர்கள்,
காயகற்ப வைத்தியசாலே, பழனி

ஆப்ரேஷனே நீக்குங்கள்

தொண்டையில் உள் நாக்கின் இரு பக்கங்களிலும் நாசித்துவாரங்களிலும் சதை வளர்ந்து சுவாஸ அடைப்பை உண்டாக்கும் உபத்திரவங்களே

"டான்ஸ்லிட்"

அற்புதமாய்க் குணப்படுத்தும்

விவரங்களுக்கு:— ஆலன்கிலினிக்
இராயப்பேட்டை, மதராஸ்.

எல்லா மருந்து ஷாப்புகளில் கிடைக்கும்.

மனோரதம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டனுக்கு அதிக உதவிச் செய்வதுதான் ஹிட்லருக்குப் பெரிய தலையிடி! ஏன்? அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபடாதவரையில், அதைப் பகிரங்கமாக எதிர்க்க முடியாது. ஜப்பானுடன், ஹிட்லர் ஒப்பந்தஞ் செய்து கொண்டது ஜப்பானின் உதவியைக் கோரியல்ல; ஜப்பானுக்கும், அமெரிக்காவுக்கும் யுத்தத்தை மூட்டிவிட வேண்டுமென்பதுதான் ஹிட்லர் கோரிக்கை. அமெரிக்கா யுத்தத்தில் இறங்காதவரையில், ஜப்பான், அமெரிக்காவைத் தாக்க முடியாது. ஜப்பானும் யுத்தத்தில் ஈடுபட முடியாது. அமெரிக்கா யுத்தத்தில் இறங்கினல், ஜப்பான், அமெரிக்காவை எதிர்க்கக் கூடும். அப்படியானல், கீழ் தேசங்களைப் பாதுகாக்க பிரிட்டன் ராணுவங்களையும், கடற்படைகளையும் கண்டிப்பாக அனுப்பியே தீரவேண்டும். விசேஷமாக சிங்கப்பூர் கடற்படைத் தளத்தைப் பாதுகாக்கப் பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் போயே தீரவேண்டும். இந்தச் சமயத்தில் பிரிட்டனைத் தாக்குவது ஹிட்லருக்குச் சுலபமாக இருக்கும்.

ஃ ஃ ஃ

ஆனல், ஹிட்லர் நினைப்பது போல் அமெரிக்க ராஜ தந்திரிகளோ, அல்லது பிரிட்டிஷ் தந்திரிகளோ ஏமாளிகளல்ல; அவர்கள் ஏமாந்தவர்களுமல்ல; அமெரிக்கா நேரடியாக இந்த யுத்தத்தில் ஈடுபடக்கூடாதென்பதே அவர்கள் கருத்து. ஆனல், பிரிட்டனுக்கு ஏராளமான உதவி கிடைத்தே தீரும். அமெரிக்கா விமானங்களும், யுத்தக் கப்பல்களுந்தான் பிரிட்டனுக்குத் தேவை. அமெரிக்க ராணுவங்கள் அவசியமே இல்லை; ஏனெனில் பிரிட்டனிடம் ஏராளமான ராணுவங்களிருக்கின்றன. இன்று நடப்பது ராணுவ யுத்தமல்ல; விமான யுத்தம்; கடல் யுத்தம் இந்த இரு யுத்தங்களுக்கு அவசியமான விமானங்களையும், யுத்தக் கப்பல்களையும், யுத்த தளவாடங்களையும் அமெரிக்கா அதிக உதவிச்செய்யுமேயானல், ஹிட்லரை எளிதில் தோற்கடிக்க முடியும். ஹிட்லர் மனக்கோட்டை கட்டுவதுபோல் பிரிட்டனில் ஏராளமான ராணுவங்களைக் கொண்டுவந்து இறக்க முடியவே முடியாது. அவருடைய மனக்கோட்டை இடிந்து, தகர்ந்து, தரைமட்டமாவது நிச்சயம்.

ஃ ஃ ஃ

ஹிட்லர் எவ்வளவு காலத்துக்குத்தான் இப்படிக் கனவு கண்டுகொண்டிருக்க முடியும்? கோடிக் கணக்கான ராணுவங்களுக்கு அவர் தண்டச் சோறு போட வேண்டியிருக்கிறது! இந்த நிலைமை நீடித்திருக்க முடியாது. ஆகவே, எப்படியும் அவர் தீவிரமான ஒரு யுத்தத்தில் இறங்கித்தான் தீரவேண்டும். விமானப் படையெடுப்பால் பிரிட்டனை மடக்கிவிட முடியாது. நேரடியாகப் பிரிட்டனை எதிர்த்தே தீரவேண்டும். எதிர்ப்பதற்கும் இந்தப் பனிகாலந்தான் ஏற்ற காலம். இந்தச் சந்தர்ப்பம் தவறினல், ஹிட்லர் அடுத்த வருஷம்வரையில் காத்திருக்கவேண்டியதுதான். அதுவரையில் காத்திருக்க ஹிட்லரால் முடியுமா? அது சந்தேகந்தான். அடுத்த பிப்ரவரி மாதத்தில் ஹிட்லர் மும்முரமான படையெடுப்பை நடத்தப்போவதாக ஏற்கனவே ஒரு வதந்தி இருந்து வந்தது. அந்த வதந்தி அநேகமாக உண்மையாக இருக்கலாம். பிப்ரவரியில சடுமையான ஒரு யுத்தம் ஆரம்பமாகலாம். அந்த யுத்தமே வெற்றி தோல்வியை நிர்ணயிக்கக் கூடும். ஹிட்லர் விமானப் படைகளைக்கொண்டு பிரிட்டனை நிர்மூலஞ் செய்ய முயற்சிப்பார். அயர்லாந்தில், ஜெர்மன் படைகளைக் கொண்டுபோய் இறக்கி, அங்கிருந்துகொண்டு பிரிட்டனைத் தாக்கப் போவதாகவும் கேள்வி. இது எவ்வளவு தூரம் உண்மையென்று தெரியவில்லை. ஜெர்மன் படைகள் அயர்லாந்துக்கு வருமேயானல், அயர்லாந்தின் சுதந்திரத்திலும் கை வைத்தே தீரும்; ஜெர்மன் படை யெடுப்புக்கு அயர்லாந்து இடங் கொடுக்குமா? ஒருபோதும் இடங் கொடுக்காது. பிரிட்டனுக்கும், அயர்லாந்துக்கும் விரோதமிருந்த போதிலும், சுதந்திர அயர்லாந்து நாஜி ஜெர்மனிக்கு இடங்கொடுக்குமென்று கனவில் கூட நினைக்க முடியாது.

ஃ ஃ ஃ

பிரிட்டனை மும்முரமாகத் தாக்கினல், இதாலியை இந்த ஆபத்திலிருந்து பாதுகாக்க முடியுமென்று ஹிட்லர் நினைக்கலாம்; அது தவறு இதாலியின் தோல்வி தோல்வியே. அதன் வெற்றிக்கு இனிமேல் இடமே இல்லை. இதாலியின் ஆதிக்கத்துக்கோ, ஆக்ரமிப்புக்கோ சாவுமணி அடித்தாகிவிட்டது! இனிமேல் இதாலியைப் பாதுகாக்க நினைப்பது, இறந்தவனுக்கு உயிர் கொடுத்த மாதிரிதான்! இந்த யுத்தம் சர்வாதிகாரிகளின் ஆட்சிக்கும், ஏகாதிபத்திய ஆட்சிக்கும் எதிராகவே வந்து முடியுமென்பது திண்ணம். அந்த இரு ஆட்சிகளையும், இந்த யுத்தம் குழிதோண்டிப் புதைத்து விடுமென்பதில் சந்தேகமே வேண்டாம்.



M. A. CHARI & Co.,
Ophthalmic Opticians,
9-9, BROADWAY, MADRAS.

நீங்கள் சென்னைக்கு வந்தால்...?
தங்கியிருப்பதற்கு வசதியான இடம்;
ஹோட்டல் எவரஸட்
60 நல்ல காற்ரேட்டமுள்ள வசதியான அறைகள். 60
சென்ட்ரல், எழும்பூர் ரயில்வே ஸ்டேஷன்களுக்குச் சமீபத்தில் இரு ஸ்டேஷன்களுக்கும் மத்தியில் டிராம், பஸ்கள் ஓடிக் கொண்டிருக்குமிடத்தில் அமைந்துள்ளது.
மனதுக்கினிய சுத்தமான ஆகாரம் நியாயமான சார்ஜ்


இரும்புபெட்டி
ஸ்தாபிதம் 1914 டெலிபோன் நெம்பர் 2224

அரிசி அல்லர்
புராதீன இரும்புபெட்டி தொழிற்சாலை உற்பத்தியாளரும், நடராஜன் இன்ஜினீரிங் ஒர்க்ஸ் சொந்தக்காரருமான
பி. நடேசமுதலியார்

மாவு மில்
உயர்தர இரும்பு பெட்டிகள், பீரோக்கள், அரிசி அல்லர்கள், மாவு மில்கள், சீயக்காய் மில்கள், இதற்கு வேண்டிய தனி சாமான்கள், இதர மிஷனெரி சாமான்களும் தயாரித்து சப்ளை செய்பவர்.
59, பிராட்வே, மதராஸ்.

சீயக்காய் மில்

நாஜிஸத்தை எதிர்த்து ரோஷமாகப் போராடுகிருர்!
பிரிட்டானிய வீரர்
வின்ஸ்டன் சர்ச்சில்
திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த சரித்திரம்
தமிழர்கள் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம்
விலை அணு 6. தபாற் செலவு 0-1-0
லோகசக்தி ஆபீஸ்,
மௌண்ட் ரோட் போஸ்டு, :-: சென்னை.

ஏன் கவலை! இதோ!
உலகப் பிரசித்திபெற்ற
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
வாங்கி உபயோகியுங்கள். தேக பலத்தையும், ஞாபக சக்தியையும், நரம்புகளுக்கு பலத்தையும், தாரணை சக்தியையும் கொடுத்து இன்ப சுகங்களையடையச் செய்யும்.
16 நாட்களுக்கு வேண்டிய ஒரு டப்பி 32 மாத்திரைகள் விலை ரூ. 1.

இனம்! காம சாஸ்திரம் இனம்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம், 26, பிராட்வே, மதராஸ்.

உயர்ந்த குணம்! ★ குறைந்த விலை!!
பிராணமிர்தம்
சகல ரோகங்களுக்கும், இவ்வொரு மருந்தே உத்திரவாதம்; வாந்தி பேதி முதல் குழந்தைகளின் சகல மாந்தபேதிகள் வரையில், பாரிச வாய்வு, ஜன்னி, சூலை முதலிய நோய்கள் ஒரு வேளை மருந்தில் குணம் தெரியும்; இராஜ கட்டி முதல் படை வரையில், மேல் பூசி குணமடையலாம்.
இதன் விலை — 1 (அவு) ரூ. 2-0-0 ¼ (அவு) ரூ. 0-8-0; ½ (அவு) ரூ. 1-0-0 ⅛ (அவு) ரூ. 0-4-0; வி. பி. பிரத்தியேகம்.
கிடைக்குமிடம்:—சரவண பவாநந்த சஞ்சீவி நிலையம்,
40, வெங்கடராமையர் தெரு, ஜி. டி. மதராஸ்.

கைத்தறி ஜவுளிகளில் சிறந்தது.
N. K. M. தங்கநாடா Regd 4577
எல்லா சுதேசி ஜவுளி வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
N. கருப்பண முதலியார், சுதேசி ஸ்டோர்,
53, கிடங்கு தெரு, மதராஸ். (தலைமை ஆபீஸ்:-ஈரோடு. பிராஞ்சு:-வேலூர்

ளுக்கு நம்மீது சந்தேகம் இருக்கிறது...இன்றேல், அவள் முதன்முறை நீங்கள் மருந்து கொடுத்தபோது அவ்வாறு நடந்துகொண்டிருக்கவேமாட்டாள்...''

"அப்படியா?......அப்படியானால் அந்தச் சனியனையும் சீக்கிரத்தில் தொலைத்துவிட்டால் போச்சு... இதற்காகவா யோசித்துக்கொண்டிருக்கிறாய்?...''

"இல்லை...எல்லாவற்றிற்கும் சமய சந்தர்ப்பங்கள் வேண்டும்...முதலில் பாட்டியைக் கவனித்துக்கொள்ளுவோம்; அப்புறம் கமலத்தை ஒரு கை பார்க்கலாம்...''

"சரி, நேரமாகிறது; நீங்கள் அரண்மனைக்கு போங்கள்...நான் அப்புறம் வருகிறேன்...'' என்றாள் ரஞ்சிதம். அவள் வார்த்தையை நம்பி, அவளுடன் பேசிக்கொண்டிருந்த வைத்தியர் அரண்மனையை நோக்கி நடந்தார். அப்பொழுதும் கொஞ்சப் இருள் இருந்துகொண்டுதானிருந்தது. வைத்தியரைப் பின்பற்றி ரஞ்சிதமும் சென்றாள். வைத்தியர் அரண்மனைக்குள் செல்லும் வாசலை அடைந்ததும், பின்னால் திரும்பிப் பார்த்தார்; ரஞ்சிதத்தைக் காணவில்லை வைத்தியர் மீண்டும் நன்றாகக் கவனித்தார். ரஞ்சிதம் போனவழி அவருக்குத் தெரியவில்லை. அவர் ரஞ்சிதத்துக்காகக் காத்திருக்கவில்லை; உடனே அரண்மனைக்குள் சென்றார்; நேரடியாக ரஞ்சிதத்தின் அறையில் போய், அங்கு ரஞ்சிதம் வரும் வரையில் காத்திருந்தார்.

வைத்தியர் வந்த சிறிதுநேரத்தில் ரஞ்சிதம் வந்தாள்; அவள் நந்தவனத்திலிருந்து வரவில்லை; ராணியின் அறையிலிருந்து வந்தாள். இது வைத்தியருக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் ரஞ்சிதத்திடம் அதைப்பற்றி எதுவும் கேட்கவில்லை வைத்தியரைக் கண்டதும், ரஞ்சிதம் சிரித்தாள்.

"வைத்தியரே, எல்லாம் தயாராக கொண்டு வந்திருக்கிறீரா?...''

"ஆம்; எல்லாம் தயாராகத்தான் வந்திருக்கிறேன்...இன்றேல், இவ்வளவு நேரத்துடன் நான் வந்து காத்துக் கொண்டிருப்பேனா?...''

"சரி போகலாம்...புறப்படுங்கள்''

"எங்கே?...''

"இளவரசியின் அறைக்கு...''

"ராணி வரவில்லையா?...''

"இல்லை...ராணியம்மா அங்கு வருவது உசிதமல்ல...''

"மெய்தான். நானும் அப்படித்தான் நினைத்தேன்...அவர்கள் தயாராக இருக்கிறார்களா?...''

"யார்?...''

"பாட்டியும், மற்றவர்களும்...அவர்களுக்கு நான் வந்திருப்பதாகச் சொல்லி அனுப்ப வேண்டாமா?...''

"நான் எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன்...''

"எப்பொழுது?...''

"இப்பொழுதுதான்...நான் என் அறையின் வழியாக வரவில்லையென்றயோசிக்கிறீர்களா?...இல்லை; பின்புறமாகச் சென்று, எல்லா ஏற்பாடுகளையும் கவனித்துவிட்டுத்தான் உங்களைத் தேடிக் கொண்டு இங்கு வந்தேன்...''

ரஞ்சிதம் எங்கே?

2-ம் பக்கத் தொடர்ச்சி

'நீ நல்ல சாமர்த்தியக்காரி; எவ்வளவு முன் யோசனையுடன் ஒவ்வொரு காரியத்தையும் கவனித்து வருகிறாய்...''

'அதெல்லாம் இருக்கட்டும்; நாம் புறப்பட்டுப் போவோம்......நேரமாகிறது...''

"போவோம்...மருந்துக்குப் பால் ரொம்ப அவசியம்; அந்தச் சமலத்தை நம்புவதற்கு முடியாது... ஆதலால், நாமே கொஞ்சம் பால் கொண்டு போவது நலலது...''

"உண்மைதான்...என் அறையில் கொஞ்சம் பால் இருக்கிறது... அதைக் கொண்டுபோகலாமா?...''

"தாராளமாகக் கொண்டு போகலாம். ஆனால், அது நல்ல பால் தானா?...நமது மருந்துக்குப் பயன்படுமா?...''

"பயன்படுமென்றே நினைக்கிறேன்......எதற்கும் நான் அதை எடுத்து வருகிறேன் ......நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் ....'' என்று சொல்லி, ரஞ்சிதம் விரைந்து சென்று, அறையிலிருந்த பாலை எடுத்துக்கொண்டு வந்தாள். வைத்தியர் முன்னிலையில் அந்தப் பாலை முகர்ந்து பார்த்தாள்.

"பால் கெட்டுப் போகவில்லை; நன்றாகவே இருக்கிறது...'' "புளிக்கவில்லை...நன்றாகக் காய்ச்சி இருக்கிறது...இரவு நான் சீக்கிரம் தூங்கிவிட்டதால் வழக்கமாகச் சாப்பிடும் பாலைச் சாப்பிட மறந்துபோனேன்...''

"பாதகமில்லை......பால் நன்றாக இருந்தால் போதும்; பால் கெட்டு இருக்குமேயானால், மருந்து அவ்வளவாக வேலைசெய்யாது; அதற்காகவே சொன்னேன்...''

"நீங்கள் சந்தேகப்படவேண்டாம். நானே அந்தப் பாலில் கொஞ்சம் சாப்பிட்டுப் பார்த்துச் சொல்லிவிடுகிறேன்...'' என்றசொல்லி ரஞ்சிதம் பாத்திரத்திலிருந்த பாலில் கொஞ்சம் சாப்பிட்டுப் பார்த்தாள். பால் நன்றாக இருக்கிறதென்றும், அதில் புளிப்பு இல்லை யென்றும் சொன்னாள். அவள் கூறியதை நம்பி, வைத்தியரும் அங்கிருந்து போகப்புறப்பட்டார்; ரஞ்சிதம் பின் தொடர்ந்தாள். இருவருமாக இளவரசியின் அறைக்குச் சென்றார்கள். இவர்களை எதிர்பார்த்துக்கொண்டு, கமலமும், மோகனாவும், பாட்டியும் தயாராக இருந்தார்கள்.

வைத்தியரும், ரஞ்சிதமும் இளவரசியின் அறைக்குச் சென்றனர் கமலம், இருவரையும் அழைத்துக்கொண்டுபோய் உட்கார வைத்தாள். வைத்தியர் பாட்டியின் நாடிகளை நன்றாகப் பரீட்சித்துப் பார்த்துவிட்டு, அவர் கையில் கொண்டுவந்திருந்த மருந்தை, ரஞ்சிதம் கொண்டுவந்திருந்த பாலில் கலக்கிப் பாட்டிக்குக் கொடுத்தார். பாட்டியோ, அங்கிருந்தவர்களோ எதுவும் சொல்லவில்லை; பாட்டியும் மறுத்துப் பேசாமல் அந்த மருந்தை வாங்கிச் சாப்பிட்டாள். சாப்பிட்டதுதான் தாமதம், உடனே போய்ப் படுத்துக்கொண்டாள். வைத்தியரும் ரஞ்சிதமும், இளவரசியிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியேறினர். நேரடியாக ராணியிடஞ் சென்றார்கள். பாட்டிக்கு மருந்து கொடுத்துவிட்டு வந்த சுதையைச் சொன்னார்கள். ராணிக்கு உள்ளூறச் சந்தோஷம். அந்த விஷமத்துக்குக்கெல்லாம் அவள்தான் காரணம்; அப்படி இருந்தும், ஒன்றும் அறியாதவள் போல் வைத்தியரிடம் அலட்சியமாகப் பேசினாள்.

"வைத்தியரே பாட்டி எப்படி இருக்கிறாள்?''

"சுகமே நித்திரை போகிறாள்; அது பாட்டிக்குக்கடைசித் தூக்கமாக, ஒரு வேளை நித்திய தூக்கமாக இருக்கலாம்...''

"ஒரு வேளை என்றீர்களே, அதில் ஏதேனும் சந்தேகம் உண்டா?''

"ஒரு சந்தேகமும் வேண்டாம்! என்னிடம் மருந்து சாப்பிட்ட பாட்டி எமலோகந்தான்! அவள் வைகுண்டம் போகக் கை கண்ட மருந்துகொடுத்திருக்கிறேன்.

"எப்பொழுது?...''

"இன்னம் சில தினங்களுக்குள் பாட்டி கண்ணை மூடினாலும் மூடக்கூடும்...அது உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். ஆனால், நீங்கள் எதிலும் கலந்துகொள்ள வேண்டாம்...''

"ஆமாம்...அடுத்தாற்போல் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறீர்கள்?...''

"ஒன்றுமில்லை...எல்லாம் உங்கள் உத்திரவுக்குத்தான் காத்துக்கொண்டிருக்கிறேன்...''

"ரஞ்சிதம் எல்லாம் கவனித்துக்கொள்ளுவாள்...இனிமேல் என்ன செய்ய வேண்டுமென்பதும் அவளுக்குத்தான் தெரியும். நீங்கள் அவளையே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்றாள் ராணி.

ரஞ்சிதம் எந்த விதமான பதிலும் கூறவில்லை. அவள் உட்கார்ந்திருந்த இடத்திலேயே பேய்போல் விழித்துக் கொண்டிருந்தாள். ராணிக்கு எந்தவிதமான பதிலும் சொல்லவில்லை. ராணியும் அதைக் கவனிக்தாள்; ரஞ்சிதத்திடம் எதுவும் கேட்கவில்லை வைத்தியருக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு, ரஞ்சிதத்திடம் சென்றாள்.

"ரஞ்சிதம், என்ன? ஏன் சும்மா ஆந்தைபோல் விழித்துக் கொண்டிருக்கிறாய்?...''

"ஒன்றுமில்லை...''

"உனக்கு உடம்பு எப்படி இருக்கிறது?

"ஒன்றுமில்லை...''

"பாட்டிக்கு மருந்து கொடுத்ததைப்பற்றிப் பயப்படுகிறாயா?...''

"ஒன்றுமில்லை....ஒன்றுமில்லை... நான் படுத்துக் கொள்ளுகிறேன்... ஆம்...அந்தப் பாட்டி'' என்று கீழே தலை சாய்த்தாள். ராணிக்கு ஒன்றும் தோன்றவில்லை. ரஞ்சிதம் பயந்திருக்கக் கூடுமென்று எண்ணினாள்.

பாட்டிக்கு மருந்து கொடுத்ததினால், ரஞ்சிதம் ஒரு பெரிய கொலை பாதகம் செய்துவிட்டதாக எண்ணி வருந்துவதாக ராணி நினைத்தாள். அந்த எண்ணம் ரஞ்சிதத்தின் புத்தியைக் கலக்கி இருக்கக்கூடும் அப்படியானால், அது ராணிக்கு நல்லதுதான். ராணி எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பார்த்தும், ரஞ்சிதம் கண் திறக்கவில்லை. பேச்சுமூச்சில்லாமல் கிடந்தாள். ராணி பயந்து போனாள். உடனே வேலைக்காரனைக் கூப்பிட்டு, அவளுக்கு வேண்டிய சிகிச்சை செய்தாள். அவர்களின் உதவியால், ரஞ்சிதத்தை அவளுடைய அறைக்குத் தூக்கிக்கொண்டு போய் ரஞ்சிதத்தின் படுக்கையில் கிடத்தினாள். இதே சமயத்தில் எதிர்பாராத விதமாக வைத்தியரும் ரஞ்சிதத்தின் அறைக்கு வந்தார். வைத்தியரைக் கண்டதும், ராணி, வேலைக்காரரை அனுப்பிவிட்டு, வைத்தியரிடம் அந்தரங்கமாக பேசிக்கொண்டிருந்தாள்.

"ராணியம்மா, ரஞ்சிதத்துக்கு ஒன்றுமில்லை, பயத்தால் மூர்ச்சையாகியிருக்கக் கூடும்; அவ்வளவுதான; இன்னம் இரண்டொரு தினங்களில் பூர்ண சுகமடைந்து விடுவாள். நான் மருந்து கொடுத்துவிடுகிறேன்.'' என்றார் வைத்தியர். ராணியும் சந்தோஷமடைந்தாள்; வைத்தியர் கொடுத்த மருந்தை வாங்கி ரஞ்சிதத்தின் வாயில் ஊற்றினாள். வைத்தியர் போனதும், ராணியும், ரஞ்சிதத்தின் அறையைச் சாத்திவிட்டு அவள் அறைக்குச் சென்றாள். அன்று பகற்பொழுதெல்லாம் ரஞ்சிதம் படுத்த படுக்கையைவிட்டு எழுந்திருக்கவே இல்லை. இரவு நெடுநேரத்துக்குப்பின் ராணி ரஞ்சிதத்தின் அறைக்குச் சென்றாள்; ரஞ்சிதத்தைக் காணவில்லை! ரஞ்சிதத்தின் அறையெங்கும் தேடினாள். ரஞ்சிதம் அங்கில்லை! அவள் இளவரசியின் அறைக்குப் போயிருக்கக் கூடுமென்று எண்ணி, அங்கு ஒரு வேலைக்காரியிடம் சொல்லி அனுப்பினாள்; அங்கும் ரஞ்சிதமில்லை!

(தொடரும்)

மாதர் அங்க லக்ஷணம்

இது ஓர் லக்ஷண சாஸ்திரம். ஸ்திரீயின் பர்தம் முதல் தலை மயிர் வரையில் உள்ள எல்லா அவய லக்ஷணங்களையும், அவைகளின் பலன்களையும் விவரமாக கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை 0—12—0

ஆனால் இது சமயம் 6 அணா தபால் ஸ்டாம்பு அனுப்பினால் புஸ்தகம் அனுப்பப்படும். உடனே எழுதுங்கள்.

மானேஜர்:- மாருதி ஏஜன்ஸி· திருத்தணி S. India.

இந்தியா
தனிப் பிரதி
விலை ஒரு அணா.
இலங்கை
இந்தியாவுக்கு
வருட சந்தா 4-0-0.
இலங்கையில்
தனிப் பிரதி சதம் 7
ஆறு மாதத்திற்குக்
குறைந்த சந்தா
கிடையாது.

தமிழ் மணி

பர்மா
தனிப் பிரதி 0-1-6.
வருட சந்தா ரூ. 5.
மலாய்
தனிப்பிரதி சதம் 10
வருட சந்தா ரூ 7.
ஒரு வருஷத்திற்கு
குறைந்த சந்தாவுக்
குப் பத்திரிகை
அனுப்பப்பட மாட்
டாது.



ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை, ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே

என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?
என்று மடியு மெங்கள் அடிமையில் மோகம்?—பாரதி

ஜயவசிகரணி

தெய்வசக்தி வாய்ந்த கவசம்

சென்ற இருபது வருஷங்களாக உலகத்தின் பல பாகங்களிலும் ஜயவசிகரணி தாயத்தை பலர் அணிந்து அதிருஷ்டத்தையும் மேன்மையையும் அடைந்திருக்கிறார்கள். உங்களது கஷ்டங்கள் எதுவாயிருந்தாலும் சரி ஜயவசிகரணியை அணிந்ததும் அக்கஷ்டங்களிலிருந்து விடுபட்டு நாளுக்கு நாள் நன்மையை அடைவீர்கள். இது சாஸ்திரீயமாக தெய்வாநுக்ரஹத்தால் தயார் செய்யப்படுகின்றது.

சில முக்கிய குணங்கள்.

1. வியாபாரத்திலுள்ள துரதிருஷ்டத்தை நீக்கி நிச்சயமாக அபிவிருத்தியைத் தரும்.
2. உத்யோக சம்பந்தமான கஷ்டங்கள் குறைந்து அதிகாரி விசுவாசமும் உயர் பதவியும் அநுகூல பலன்களும் உண்டாகும்.
3. குடும்ப கஷ்டங்களும் மனஸ்தாபங்களும் குறைந்து மன நிம்மதியும் ஒற்றுமையும் உண்டாகும்.
4. ஏவல், பில்லி, சூனியம், மற்றும் விரோதிகளினால் செய்யப் படும் பிரயோக லக்ஷணங்கள் எல்லாவற்றையும் நீங்கச் செய்யும்.
5. பண நிலைமையில் அபிவிருத்தியான மாறுதல் உண்டாகும்.
6. மனக் கவலை, தரித்திரம், வியாதிபீடை, மற்றும் இப்படிப்பட்ட கஷ்டங்கள் யாவையும் நிவர்த்தி செய்து நன்மையையும் அதிருஷ்டத்தையும் தரும்.
7. ஸ்திரீகளுக்குண்டாகும் சகல கிரஹதோஷங்களும் இந்த கவசத்தை அணிவதால் நிச்சயமாக நிவர்த்தியாகும். சந்ததியும் உண்டாகும்.
8. குழந்தைகளுக்கு இந்த கவசத்தை அணியச் செய்வதால் பாலாரிஷ்ட தோஷம் நீங்கும். மற்றும் சகல பாலகிரஹ தோஷங்களினால் உண்டாகும் ரோகபீடை நீங்கி நல்ல ஆரோக்கியம் உண்டாகும்.
9. மாணவர்கள் இதை யணிவதால் நல்ல ஆரோக்கியம், பரீக்ஷையில் ஜெயம், மற்றும் பலவித நன்மைகள் அடைவார்கள்.
10. தெய்வ கடாக்ஷம், குடும்ப ஒற்றுமை, அதிருஷ்டம், மற்றும் பலவித நன்மைகளும் உண்டாகும்.

——: சார்ஜ் விபரம் :——

ஜயவசீகரணி 1-க்கு ரூ. 2—8—0. வி. பி. சிலவு 0-7-0.

ஹனுமத் உபாஸி:—

வி. கே. சடகோபாச்சாரியார்,

ஹனுமான் ஜோதிஷ ஆச்ரமம்,

திருத்தணி, S. இந்தியா.

மூலவியாதிகளுக்கு

கருணைக்கிழங்கு லேகியத்தைச்

சாப்பிடுங்கள் (ஆப்ரேஷன் வேண்டாம்)

உள்மூலம், வெளிமூலம், சீழ்மூலம், இரத்தமூலம், மூலவாய்வு, மூலப்பவுத்திரம், வயிற்றுப் பொருமல், பசியில்லாமலிருப்பது, மலச்சிக்கல் முதலிய நோய்களை

12 நாள் மருந்தில் பூரண குணப்படுத்துகின்றது

மூலத்தில்குத்து, எரிச்சல், சீழ், இரத்தம் வருவதையும், பொறுக்கமுடியாமல் அவஸ்தைப் படுவதையும் மூன்றேவேளையில் நிறுத்திவிடும்.

குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும். 12 நாள் மருந்து விலை ரூ. 3.

குறிப்பு:—உங்கள் வியாதி எதுவானாலும் சரி எங்கள் வைத்தியசாலைக்கு எழுதுங்கள்.

அரண்மனை வைத்தியர் S. T. மாணிக்கம் பிள்ளை,
பழனியாண்டவர் வைத்தியசாலை, அடிவாரம், பழனி. S. I.

காரம், மணம், குணம், நிறம், ஒருங்கே அமைந்த

வி. என். ஷண்முகம் பட்டணம் பொடியை

எப்பொழுதும் உபயோகியுங்கள்.

நெ. 8, ஆச்சாரப்பன் சந்து, மதராஸ். (ஏஜண்டுகள் தேவை)

மலேரியா. மற்றெல்லா விஷஜுரங்களிலிருந்து ஓர் விடுதலை

ஜண்டு மலேரியா மிக்ஸ்சர்

ZANDU MALARIA MIXTURE

மலேரியா ஜுரத்திற்கும் மற்ற விஷஜுரங்களுக்கும் இது ஒரு மேன்மையான மருந்து.

ஒரு முறை உபயோகித்து குணம் தெரிந்து கொள்ளுங்கள்.
ஒரு புட்டி விலை அணா 13.

தமிழ் நாட்டில் உள்ள முக்கியமான ஏஜண்டுகள்:—

1. பி. வி. முத்துகிருஷ்ண ராஜா, தஞ்சாவூர்.
2. ஆர் எஸ். வாஸன் அண்டு கோ, திருப்பூர்.
3. விநாயகர் மெடிகல் ஹால், திருச்சினாப்பள்ளி
4. தி. ஸிடி மெடிகல் ஸ்டோர்ஸ், சேலம்.
5. என். ஆர். ஸ்வாமி அண்டு கோ, மதுரை.
6. எஸ். கோவிந்தசாமி நாயுடு, கும்பகோணம்.
7. சுப்பையா மெடிகல் ஸ்டோர்ஸ், திருவாரூர்.
8. கனேசர் மெடிகல் ஹால், காரைக்குடி.

குணத்தில் சிறந்தது-மணத்தில் உயர்ந்தது-பஜாரில் புகழ்ந்தது.

அகிலம் புகழும்

ஸ்ரீ. அபிராமி பட்டணம்

பொடியையும், சோப்பையும்

உபயோகியுங்கள். (ஏஜண்டுகள் தேவை.)

ஸ்ரீ. அபிராமி பட்டணம் பொடி தொழிற்சாலை,
68, நாட்டுபிள்ளையார் கோவில் தெரு, ஜி. டி. மதராஸ்.

Edited Printed and Published by P. ALBIN FERNANDO, at the "TAMIL MANI" Press, 21, Sembudoss St, G. T. MADRAS.